பொதுப் பாடல்கள்

எண்	பாடல்	எண்	பாடல்
323	அகர முதலெனா	343	ஊனுந தசை
324	அடியார் மனை	344	ஊனே றெலும்பு
325	அதல சேடனை	345	எட்டுடெரு
326	அப்படியே	346	எதிரொருவ
327	அமல வாயு	347	எழுதரிய
328	ஆகார வீனன்	348	எழு பிறவி
329	ஆசை கூர	349	என பந்த வினை
330	ஆரவாரமா	350	ஏட்டிலே வரை
331	ஆராத காதலாகி	351	ஒழுகூனிரத்த
332	ஆராதனராட	352	ஓதுமுத்தமிழ
333	ஆவி காய்பது	353	கடலை பயறொடு
334	ஆறை ஞான	354	கருப்பற்றா
335	இசைந்த ஏறுங்	355	கருப்பையிற்
336	இத்தரணி மீதிற	356	கவடு கோத்தெழு
337	இரவொடும பக	357	காதி மோதி
338	இருநோய் மலத்தை	358	குகையில் நவ
339	இருந்த வீடுங்	359	குருதி தோலினல்
340	இனமறை விதம	360	கொடிய மத
341	உலகத்தினில	361	சந்தம் புனைந்து
342	உறவின் முறை	362	சமய பதி

எண	பாடல	எண	பாடல்
363	கருவிய சாத்திர	383	நரையொடு பற
364	கலமல மகுத்த	384	நாரரலே தோல்
365	சாங்கரி யாடி	385	நாவிரணடித
366	சிவஞான புண்டரி	386	நாரு மிகுத்த
367	சீதமலம் வெப்பு	387	நித்தமுற்றுனை
368	சுடடது போலானை	388	நிமிரந்த முதுகுங்
369	சுருதி வெகுமுக	389	நிருதராாக்
370	சூதினுண வாசை	390	நீருமொண்பு தோலி
371	செழுந்தாது	391	நீலங்கொள்
372	ஞான விபூஷணி	392	நெடிய வட
373	தசையு குதிரமு	393	பகிர நினைவொடு
374	தத்தனமு	394	பட்குப் படாத
375	தரணி மிசை	395	பரவைக் கெத்தனை
376	தலைவலைய போக	396	பருதியாய்ப்
377	தவநெறி தவறிய	397	பாணிக்குட
378	திரிபுரமதனை	398	பிறவியலை
379	திரை வருக	399	புகரில் சேவல.
380	துளருமத	400	புத்தகத
381	தோரண கனக	401	புவிககுண பாத
382	தோவததியா	402	பூத கலாதிகள்

எண்	பாடல்
403	பெருங்காரியம்
404	பேரவா வரு
405	பொதுவதாய
406	போத நிர்க்குண
407	மக்கள் தாயா
408	மநனேவிய
409	மதிதனையிலாத
410	மன கபாட
411	மனைமக்கள்
412	மாண்டா ரெனு
413	முருக மயூர
414	முனையழிந்தது
415	மூவாதிலமதின
416	மோது மறவி
417	வாதந் தலைவலி
418	வாரி மீதே யெழு
419	வானபபுக்கு
420	வேடர் செழுந்தினை
421	வேத வித்தகா

பொதுப் பாடல்கள்

திருப்புகழ் பதம் - விளக்கம்

		பக்கம்
1	துரிய முடிவை - துரியாதீதம் ...	105
2	மாசான நாலெண் வகைதனை ...	105
3	யமனை மோதி ...	105
4	வாராகி - சப்தமாதர்கள் ...	105
5	ஆவாகன மாமந்திரத்து ...	105
6	அந்த நாளில - நான்கு நிகழ்ச்சிகள் ...	106
7	திசையில் நின்ற நாகம் ...	106
8	குறமறவர் கொடி அடிகள் .	106
9	முயலகனின் மீதாடுவார் . .	106
10	தெக்ஷண செவிதனில் ...	106
11	தவம், மாதவங்கள் பயில் ...	106
12	அகில வாதிகளும் ...	107
13	அறுசமய சாத்திரப ..	107
14	கற்பகத் தோப்பு ..	107
15	மால் கொண்ட பேதை ...	107
16	புரிபிழை பொறுக்கும் சாமி ...	108
17	மாயை ...	108

கடிக்கின்ற குணத்தை உடைய பாம்பை ஆபரணமாக அணிந்துள்ள
சிவபெருமானுக்கு இனியவனே
சகல கலைகளும் தெரிந்த சிறந்த உண்மைப் புலவனே!
அடியவர்களுடைய அன்பில உறைவிடம் கொண்டுள்ள வேலனே
ஆறு திருமுகங்களை உடைய அதிசயப் பெருமானே

சந்தனம் அணிந்து, (சந்தம) அழகு சிறந்த, குளிர்ந்த கொஙகை
களை உடைய வஞசிக் கொடி போன்ற பெண்ணும் மனையவ
ளும்
(என்பை) பற்றுக்கோடாகக் கொண்டு (துணையாகக் கொண்டு), கொஞ்சி
ஒலிக்கும சதங்கை அணிந்துள்ள பாதங்களை உடைய குழந்தைகளும்
ஆக இவர்களை என்னுடைய செல்வங்கள் எனறென்று அடிக்கடி மனத
திலே எப்போதும் புகழ்ந்து கூறி, மிக நன்றாக வாழ்கின்ற
(இந்த நிலையிலா) இன்பத்தை நீக்கி, எனது துன்பங்கள எல்லாம்
அடங்கி ஒழிய, இன்று உனது திருவடிகளை தந்தருள வேண்டும்.
பூங்கொத்துக்களை உடைய கடப்பமாலையைச் செய்வ்விய குளிர்ந்த
புயங்களில் அணிந்து கொண்டு அழகிய மலையிடங்களில் வீற்றிருப்பவனே
வாசனை கொண்ட மலைக் கொல்லை (செய்) வயலகளில் இருந்த
(மின்) மின்னல் போன்ற ஒளி கொண்ட வள்ளியைக் கண்ட கந்தனே!
கிரவுஞ்ச மலையைப் பிளந்த ஒளி வேலனே!
மெய், வாய், கண், மூக்கு, நாசி எனப்படும ஐந்து பொறிகளையும்
ஜெயித்து இருக்கும் அன்பாகளுடைய உடலிற் பொருந்தி
விளங்கும் அழகோனே!

கடி அரவு பூணர்க்கு இனியோனே

கலைகள் தெரி மாமெய்ய புலவோனே
அடியவர்கள் நேசத்து உறைவேலா
அறுமுக விநோதப் பெருமானே

---

(561) அமிர்த வர்ஷணி (8) (ஃ) ஆதி

சந்தம் புனைந்து சந்தம் சிறந்த
தண் கொங்கை வருசி மனையாளும்
தஞ்சம் பயின்று கொஞ்சுரு சதங்கை
தவழும் பதங்கள் இளதோரும
எனதன் தனங்கள் என்றென்று நெஞ்சில
என்றும் புகழ்ந்து மிக வாழும்
இன்பம் களைந்து துன்பங்கள் மங்க
இன்று உன் பதங்கள தரவேணும்
கொந்தின் கடம்பு செந்தண் புயங்கள்
கொண்டு அங்குறிஞ்சி உறைவோனே
கொங்கின் புனம் செய் மின் கண்ட கந்த,
குன்றம் பிளந்த கதிர்வேலா

ஐந்து இந்த்ரியங்கள் வென்று நாளும் அன்பர்
அங்கம் பொருந்தும் அழகோனே

அண்டம் தலங்கள் எங்கும் கலங்க
அன்று அஞ்சல் என்ற பெருமானே

(362) சாரங்கா (8½) (ம) 1½+2+2+3

சமய பத்தி வருதாத் தனை நினையாதே
சரண பத்ம சிவாசகனை தனை நாடி
அமைய சற்குரு சாத்திர மொழி நூலால்
அருள் எனக்கு இனிமேற் துணை தருவாயே
உமை முலைத் தரு பாற் கொடு அருள் கூறி

உரிய மெய்த தவம் ஆக்கி நல் உபதேசத்

தமிழ்த் தனைக் கரை காட்டிய திறலோனே

சமணரைக் கழுவேற்றிய பெருமானே

43

(363) ஆனந்த பைரவி (7½) (ம (3+½+3)

சருவிய சாத்திரத் திரளான
சந்திகழ் அனுபத்து அமையாத

அருமறையாறு பெறற்கு அரிதாய

அண்டங்களும், பூமிகளும் எங்கும் (அன்று சூரனுக்கு அஞ்சி) கலங்கின அந்தக் காலத்தில் அஞ்சல் பயப்படாதீர்கள் என்ற பெருமானே

மதக் கொள்கையில் உள்ள பத்தி, (விருதா தனை) பயனற்ற (அளவினது)
தன்மையது என்று நினையாமல் - சமய பக்தியை வீணென்று நினையாமல் -
உனது திருவடித் தாமரையிற் சிவார்ச்சனை செய்ய விரும்பியவனாய் (நான்)
மனம் பொருந்தி நிலைத்திருக்க, சற்குரு மூலமாகவும், சாத்திர மொழி நூல்கள் மூலமாகவும்
உனது திருவருளை எனக்கு இனிமேல் துணையாகத் தந்தருள்வாயே
உமா தேவியின் கொங்கை தந்த (பால் கொடு) பால் உண்டதன் பயனாக,
சிவபெருமானது திருவருட்பதிகங்களில் எடுத்துக் கூறி - அங்ஙனம்
திருவருளை எடுத்துக் கூறுதலையே
நினைக்கு உரிய உண்மை தவ ஒழுக்கமாகக் கொண்டு - உலகினர்க்கு வேண்டிய
உண்மைத் தவ நிலையை ஓங்கச் செய்து - நல்ல உபதேசங்களைக் கொண்ட
(தேவாரத்) தமிழ்ப்பால் முத்திக்கு ஒரு கரை காட்டுவித்த பராக்கிரமசாலியே
(அல்லது) தமிழைக் கரை கண்ட பராக்கிரமசாலியே
சமணர்களைக் கழுவிலேற்றின பெருமானே

அனிதய வார்த்தையைப் பெறுவேனோ

நிருதரை முககறுத்து எழு பார

நெடுதிரை ஆர்பபெழப் பொருதோனே

பொருள அடியாற் பெறக கவிபாடும

புலவர் உகாத்துணைப பெருமானே

---

(364) குநதல வராளி (5½) 364 ம (4+1½) 144

சல மலம அசுத்தம்,மிக்க தசை,குருதி அத்தி மொயத்த

தடி உடல தனககுள உற்று மிகு மாயம

சகலமும் இயற்றி. மத்த மிகும் இரு தடக்கை அதத்தி

தனில் உரு மிகுத்து மக்க ளொடு தாரம்

கலன்,அணி துகிற்கள, கற்பி நெடு குலம் அனைத்தும் முற்றி

கரு வழி அவத்தில் உற்று மகிழ் வாதி

கலைபல பிடித்து,நித்தம் அலைபடும் அநாத்தம் உற

கடு வினை தனக்குள் நிற்பது ஒழியாதோ

மலைமகள் இடத்து வைத்து, மதி,புனல சடைக்குள வைதது

மழு அனல கரத்துள வைத்து மருவார்கள்

ஜலம், மலம் அசுத்தங்கள் நிறைந்த மாமிசம், ரத்தம் (அத்தி) எலும்பு இவைகள் நெருங்கிச் சூழ்ந்துள்ள தடித்த இந்த உடலில் வாசம் கொண்டு, மிக்க மாயமான – வஞ்சனையான – மோசமான செயல்கள் பலவற்றையும் செய்து, மதம் மிகுந்ததும் (இரு தடக்கை) கரிய பெரிய துதிக்கையை உடையதுமான யானை போல உருவம் பெருத்து,

குழந்தைகளுடன், மனைவி

ஆபரணங்கள், அணிந்து கொள்ளும் ஆடைகள், (கறபினொடு) கல்வி இவைகளுடன் குலம் (சாதி) ஆத இவை முழுமையும் (முறை) முழு வளர்ச்சி பெற்று, பிறப்பு வழி என்கின்ற (அவம்) பயனற்ற வழியில் செலப் வழிய, அதிலே மகிழச்சி அடைந்தவனாகி

பலவித சாத்திர நூல்களைக் கற்று, நாள் தோறும் அலைச்சல் உறும் வேதனை சேர, நிறைய பொல்லாத வினைக்கு உள்ளாகி நிற்கும் இச் செயல் நீங்காதோ!

மலைமகள் பார்வதியை இடது பாகத்தில் வைத்து, சந்திரனையும், கங்கையையும் சடையிலே வைத்து, மழு ஆயுதத்தையும், நெருப்பையும் கையிலே வைத்து, பகைவர்களாகிய திரிபுரத்து அசுரர்கள்

மழுவுற நினைத்து, வெற்பை வரிசிலை இடக்கை வைத்து
மறைதொழ நகைத்த அத்தா பெருவாழ்வே

பலதிசை நடுக்கமுற்று நிலைகெட, அடற் கை உற்ற
படையது பொருப்பில் விட்ட முருகோனே

பழுதறு தவத்தில உற்று வழிமொழி உரைத்த பத்தர்
பவம் உய அருட்கண் வைத்த பெருமானே.

---

(365) வாசஸ்பதி (4½) 365 (✓) 2+½+1

சாங்கரி பாடி இட ஓங்கிய ஞான சுக
தாண்டவம் ஆடியவர் வடிவான
சாந்தம அதீதம், உணர் கூந்தம சாதியவர்
தாங்களு ஞானமுற அடியேனுந்

தூங்கிய பார்வையொடு தாங்கிய வாயுவொடு
தோன்றிய சோதியொடு சிவயோகம்

தாண்டிய சீவனொடு, வேண்டிய காவமொடு
சோமபினில் வாழும் வகை அருளாதோ

கிறந்து உழிய நினைத்து, மேரு மலையக கடடப்படட வில்லாக (45)
இடது கையிலே வைத்து, வேதங்கள் தொழுது நிறகச் சிரித்த
(திரிபுரத்தைச் சிரித்து எரித்த) பெருமானும் சிவனது பெரும் செல்வமே
பலதிசைகளில உளளவாகளும, நடுககம் அடைந்து நிலை தருமாறு,
(அடல) வெற்றி பொருந்திய திருககையில இருந்த வேற்படையை
கிரவுஞ்சகிரியின மீது பிரயோகித்த முருகனே
குற்றமற்ற தவநிலையில் இருந்து, வழிபாடடு மொழிகளை- துதி
மொழிகளைச் சொலகின்ற பக்தர்கள் பலரும் நற்கதி பெற அருட்
பார்வை வைத்த- திருக்கண்ணால் அருள் பாலித்த பெருமானே.

365

சாங்கரி- சங்கரி- பார்வதி தேவி பாடித தாளம போட மேம்படடு விளங்கிய
ஞான ஆனந்த தாணடவததை ஆடினவரான சிவபெருமானது வடிவை அடைந
துள்ளவர்களும் - சாரூப பதவியில உளளவர்களும்
சாந்த குணத்தின் உசச நிலையில் இருந்து, (உணர் - உணர்ச்சி) ஞானம்
(கூந்தம – கூர்ந்த தம) கூர்ந்த – மிககிருந்த (தம சாதியவா தாஙகளும)
அநதச சிவபிரானது இனத்தினருமான- சிவன தமாகளான பெரியோர்களும
(அந்நாடகக காடசியால) ஞான நிலையை அடைய, அடியேனும்
அறிதுயில கொணட ஞானக்கண்ணுடனும், புறத்தே ஓடா வண்ணம் சுழுமுனையில்
நிறுத்தப்படட பிராணவாயுவுடனும, அந்நிலையில் காணப்படும ஜோதி தரிசன
துடனும். சிவயோக நிலையில்
(தூணடிய சிவனெந்) பரசிவததுடன கூடி நிலதத ஆனமாவுடன, பிரமனின
கால அளவு - பல்லூழி காலம்- (சோம பிணில) சுமமா இருககும் மௌன
ஞான நிலையில வாழுமபடியான பாக்கியத்தை உனது திருவருள(என கருத)
அருளாதோ!

வாங்கு கை யானை என, என குலவாழ வளா
வான் பொழில சூழும் வயல — அயல ஏறி

மாங்கனி தேன் உழுக வேங்கையில் மேல் அரிகள
மாந்திய ஆரணிய — மலைமீதில
பூங்கொடி போலும் இடை ஏங்கிட வார் அம் அணி
புண்பன பாரியன — தன பாரம்

பூங் குற மாதினுடன ஆங்கு உறவாடி, இருள்
பூம் பொழில் மேவி வளா — பெருமானே

66 கலயாணி (2½) 366 (~) 1+½

சிவ ஞான புண்டரிக மலா மாதுடன் கலவி
சிவ போக மன பருக — அறியாமற்
செக மீது உழன்று, மல வடிவாய் இருந்து, பொது
திகழ மாதர் பின் செருமி — அழிவேனோ

தவ மா தவங்கள் பயில் அடியாா கணங்களொடு
தயவாய மகிழ்ந்து தினம — விளையாடத
தமியேன மலஙகள, இரு வினை, நோய, கிடநது அலறத்
ததி நாளும வநதது என முன — வரவேணும

தொங்குகின்ற துதிக்கையைக் கொண்ட யானை போல- யானையின் துதிக்கை போல (குலை வாழை) குலைகளை தள்ளும் வாழை வளர்கின்ற, பெரிய பொழில்கள் சூழ்ந்துள்ள வயல்களின் பக்கங்களில் ஏறி- பாய்ந்து சென்று

மாம்பழங்களைத் தேன் ஒழுகும்படி, வேங்கை மரத்தின் மேலிருந்து (அரிகள்) குரங்குகள் (மாந்திய) உண்ட காய்களைக் கொண்ட வள்ளி மயில் பூங்கொடி போன்ற துண்ணிய இடை வாடும்படி (வார்) ரவிக்கையையும் அழகிய ஆபரணங்களையும் அணிந்துள்ளனவும் (பாரியன) பருத்துள்ளனவுமான கொங்கை பாரங்களைக் கொண்ட

அழகிய குறப்பெண் வள்ளியுடனே அம்மலையில் (உறவாடி) நேசம் பூண்டு, இருண்டதும் அழகியதுமான அவ்வளி மலைச் சோலையில் விரும்பி வீற்றிருந்த பெருமானே

366

முத்தி

சிவஞானம் எனப்பட்ட தாமரை மலரில் வீற்றிருக்கும் மாதுடனே (சிவ மாதுடனே) கலவி- புணர்ந்து ஏற்படும் (சிவ போகத்தை) மங்களகரமான பேரின்பத்தை, மன-நன்றாகப் பருக- உண்டு- அனுபவிக்கத் தெரியாமல்

பூமியிலே அலைந்து திரிந்து, (ஆணவம், கன்மம், மாயை என்னும்) மும்மல வடிவாய இருந்து, விலைமாதர்களின் பின்னாலே நெருங்கி அடைந்து அழிந்து போவேனோ!

தருமம் பெருந்தவமும் செய்கின்ற அடியார் கூட்டங்களுடன் அன்பு வைத்து மகிழ்ந்து தினமும் விளையாடவும்

அடியேனுடைய மும்மலங்கள், இருவினைகள், நோய்கள் அசுசு (அழுக்கு)
அவற (தீர) தக்க சமயத்தில், நாள்தோறும், பாதயுகளாய பாதங்களுடன் என்முன்னே வரவேண்டுகின்றேன்

உவகாரி அன்பர் பணி கலியாணி, எருதை இடம் சிவகாமி
உறை, நாயகம் கவுரி

உளிர் ஆனையின் கரமில மகிழ மாதுளங் கனியை அருணபாலா
உரு நாள் பகிர்ந்த உமை

அவமே பிறந்த எனை இறவாமல் அன்பர் புகும் அருள வோனே
அமுத ஆலயம பதவி

அழகா, நகம் பொலியும மயிலா, குறிஞ்சி மகிழ் பெருமானே
அயிலா, புகழ்ந்த வாகன்

---

(367) பீம்பளாஸ் (8) 367 (4) ஆதி

சீத மலம, வெயபு, வாத(ம்) மிகு பித்த உடனாகே
மான பிணி சுற்றி

சேரும் உயிர் தப்பி ஏகும் வண மிகக வருபோதில்
தீது வினை விகக

தாரை யொடு மக்கள் நீதி யொடு, துக்க அழியா முன்
சாகரம் அதற்குள்

தாரணி தனக்குள் அரணம் உரைத்த வர வேணும்
தாள தர நினைத்து

யாவர்க்கும் உதவி செய்பவள், அன்பர்கள் பணிகின்ற கலியாணி, எநறை
சிவபிரானது இடது பாகத்தில் இருக்கின்ற (நாயகம்) தலைமை வாய்ந்த
கவுரி, சிவகாமி

விளங்குகின்ற (ஆனையின்) விநாயகருடைய காதில் (யாவரும்)
மகிழுமபடியான மாதுளம் பழத்தை முன்பொரு நாள் (பகிர்ந்து)
கொடுத்த உமை அருளின குழந்தையே

வீண காலமே போக்குப் பிறந்த என்னை, இறவாத வரத்தைத் தந்து
அன்பர்கள் புகுகின்ற அமுதக கோயிலில் அருளதானததை -நிலையை
அருளியவனே (அழிவின்மைக்கு இருப்பிடமாகிய முத்தியை)

அழகனே! மலை நிலததே விளங்கி வாழும் மயில் வாகனத்தை உடைய
வனே! மலை நிலங்களில் மகிழ்ச்சி கொள்ளும் வேலாயுதனே!
புகழ்ந்து போற்றும் அடியார்களுக்குப் பெருமானே

367

சீதபேதி, சுரம், வாதம், மிகவும் வரும் பித்தம் - ஆகிய நோய்கள்
சூழ்ந்துள்ள இந்த உடலினுள்ளே

சேர்ந்துள்ள உயிரானது நழுவிப் போம்படி, அதிக தீமை உண்டா
கும்படி வருகின்ற சமயத்தில்

தந்தையும் மக்களும் இயல்பாகவே துக்கக் கடல் தனில் வேதனைப்
படவும் அறியா முன்பு

இப்பூமியில், வேதங்கள் போற்றுகின்ற (உனது) திருவடியை
(அடியேனுக்குத்) தர (நீ) நினைவுற்று வந்தருள வேண்டும்

ஜீவாத்மாக்களாகிய மாதர்கள், (பரமாத்மாவாகிய) உன் மீது காத
லுற்று வாடினால், திருவுருக்காட்சி தந்து அழகிய மயில் மீது நித்தம் வருபவனே
திருமால, பிரமன் ஒப்பிலாதபடி உயர்ந்த தவ நிலையில (உன்னைப்)
பற்றி - அன்பு வைத்து, (மால் உழலும்) காதலில் திளைக்கும்
மற்ற வேதிய சிரேஷ்டர்கள் பிறர்க்கும், முன்பு
வேத வார்த்தைகளின் உண்மைப் பொருளை ஓதிக் களித்த தலைவனே
வீரம் மிக்க வலிமை வாய்ந்த வேலனே!
முன்பு அசுரர்கள் காவலில் இட்ட தேவர்களின் சிறையை
நீக்கி (அவர்களை) மீளவித்து விடுவித்த பெருமானே

368

கையில உள்ள ஒரு பொருள் சுட்டால் எப்படி அதை உடனே கை விட்டு
விடுவோமோ அது போல ஆசைகளைச் சட்டென்று விட்டு ஒழித்து, உலக
வாழ்க்கையால் ஏற்படும் துக்கங்களில்லாத ஞான சுக நிலையை அடைந்து
சொற்களுக்கும, (கரணம) மனதுக்கும மேற்பட்ட நிலையதாய்.
குணமிலாத - குணங் கடந்த நிலையில் விளங்குகின்றதும் பரிசுத்த
மானதும் சார்பற்றதுமான பரவெளியைக் காண
மொட்டுகள் மலர்ந்த தாமரைகளாகிய சக்கரங்களாம் ஆறுதாரங்கள்
அனைத்திலும - எல்லாவற்றின் மீதும் கடந்து சென்று - மதிக் கலா
மிர்தம் பொங்கும் நிலைக்கு மேலானதும்
30+6x6=36+30 96 தத்துவங்களுக்கும் மேலானதுமான, அடையாள அறி
குறியான, மோன நிலையை அடையும் பாக்கியம எனக்குக் கிட்டுமா
மனத்தால் அளத்தற்கரிய வேதனையோடு, கோ கோ என்று அலறிக்
கொண்டே பிரமதேவன ஒடவும் கிரவுஞ்சகிரி சாய்ந்து மடிந்து விழவும்

மாதர் மயல் உற்று வாட, வடிவுறு
மா மயிலில் நித்தம் வருவோனே
மாலும் அயன் தப்பிலாதபடி பற்றி
மால் உழலு மற்ற மறையோர் முன்

வேத மொழி வித்தை ஓதி அறிவித்த
நாத, விறல் மிக்க அயில் வேலா
மேல் அசுரர் இட்ட தேவர் சிறை வெட்டி
மீள விடுவித்த பெருமானே-

368

(368) ஹிந்தோளம் (4½) [illegible] (3+½)

சுட்டது போல ஆசை விட்டு, உலக ஆசார
துக்கம் இலா ஞான சுகமேவி
சொற் கரண அதீத, நிர்குணம் ஊடாடு
சுத்த நிராதார வெளி காண

மொட்டு அலர் வாரிச சக்ர சபாதார
முட்டவும் மீதேறி மதி மீதாய்

முப்பதும், ஆறும் முப்பதும் வேறான
முத்திரையா மோனம் அடைவேனோ
எட்ட ஒணா வேதனத்தொடு கோ கோ எனப
பிரமா ஓட வரை சாய

எற்றிய மொழி வமறிட, மாறுய
எத்தனையோ கோடி அசுரேசர்
படும், ஒரு தர் மான, விக்ரம வேல் ஏவு
மத்திரு தோள வீர திசை காவல்
பததினி தோள் தோயும் உத்தம, மாறுது
பத்தி செய் வானுடர் பெருமானே.

---

(369) குந்தலவராளி 369 (7½) (ட) (1½+1½+1+1½+2)
கருதி, வெகுமுக புராண கோடிகள்.
சரியை, கிரியை, மக யோக மோகிகள
துரித பர சமய பேத வாதிகள் எனும் ஒடித்
தொடர உணர அரிதாய, தூரிய
பொருளை, அணுகி அநுபோகமானவை
தொலைய, இனிய ஒரு ஸ்வாமியாகிய நின ப்ரகாசம்
கருதி உருகி அவிரோதியாய், அருள
பெருகு, பரம சுக மா மகோததி
கருணை அடியரொடு கூடி ஆடி மகிழ்ந்து நீயக

கனக மணி வயிர நூபுர, ஆரிய.
கிரண சரண அபிராம கோமள
கமல யுகளம் மறவாது பாட நினைந்திடாதோ

அலை வீசுகின்ற ஏழு கடலும் வற்றிப் போகவும், பகைவர்களா
யிருந்த எத்தனையோ கோடிக் கணக்கான அசுரத் தலைவர்கள்
அழிபட்டு, ஒப்பற்ற சூரன் மாளவும், பராக்ரமம் பொருந்திய வேலா
யுதத்தைச் செலுத்தின, பன்னிரு தோள் வீரனே! தினைப்புனம் காவல்கா
12
கறபுடை நாயகி வள்ளியின் தோளை அணைந்த உத்தமனே! மாறுது
நிலைத்த புத்தியுடன் பத்தி செய்த தேவலோகத்தினருடைய பெருமானே

369

வேதமும், பல விதப்பட்ட கோடிக்கணக்கான புராணங்களும், சரியை
மார்க்கத்தில் இருப்பவர்களும், கிரியை மார்க்கத்தில் நடப்பவர்களும்,
மகா யோக மார்க்கத்தில் ஆசை பூண்டு உள்ளவர்களும் (துரிதம்) கலக்கத்தைத்
தரும் பரசமய வேதங்களை மேற்கொண்டு வாதிப்பவர்களும், (என்றும் ஓழு) வேகத்தில்
(அயர்ந்து
தொடர்ந்து பற்றுதற்கும் உணர்தற்கும் அருமையான தான
(துரிய) சுத்த நிலைப் பரம்பொருளை அண்டி நெருங்கி, உலக அநுபோகங்களை
தொலைந்தொழிய, இன்பம் தரும் ஒப்பற்ற சுவாமியாகிய (உனது) திவ்ய பேரை
(ஒளியை
தியானித்து உள்ளம் உருகி, அவிரோத ஞானம் கொண்டவனாய் (எல்லா
உயிரும் எனது உயிர் என்னும் இதய பாவனை உடையவனாய்) அருள் பெருகும்
பரம சுகமாம் பெரிய கடலில், கருணை நிறைந்த உன் அடியார்களுடன்
கூடித் திளைத்து மகிழ்ந்து (நீபம்) கடம்பும்
பொன், ரத்னம், வயிரம் இவை விளங்கும் (நூபுரம்) சிலம்பு அணிந்த
தும், (ஆரிய) மேலான, ஒளி வீசுவதும் (சரண) அடைக்கலத்தான
மாய (அபிராம) அழகுள்ளதாய், (கோமள) இளமை விளங்குவதான
உன திருவடித் தாமரைகளாம் இரண்டையும். நான மறவாமல்
பாடத் தங்கள் திருவுள்ளம் நினைந்திடாதோ!

மருது நெறு நெறென மோதி வேரொடு,
கருதும் அலகை முலை கோதி, வீதியில்
மதுகையொடு தறுகண் ஆனை வீரிட வென்று, தாளால

வலிய சகடு இடறி, மாயமாய், மடி
படிய நடை பழகி ஆயர் பாடியில்
வளரு முகில் மருக, வேல் விநோத, சிகண்டி வீரா

விருதர் நிருதர் குல சேனை சாடிய
விஜய, கடதட கபோல வாரண
விபுதை புளக தன பார பூஷண, அம் கிராத

விமல நகில் அருண வாகு பூதர,
விபுத கடக, கிரி மேரு பூதர
விகட சமர, சத கோடி வானவர் தம்பிரானே.

மருத மரங்களை நெறுநெறென வேருடன் முறியும்படி மோதியும், (தனைக கொல்லக) கருதி வந்த அலகைப் பேயின் கொங்கையை (கோதி) குடைந்து தோண்டியும், தெருவிலே (மதுகையொடு) வலிமையுடனும், (கறுகண) கொடுமையுடனும (கொல்ல வந்த) குவலயா பீடம் என்னும் யானை அலறிக கூச்சலிட அதை வென்றும், காயால

வலிமை வாய்ந்த (சகடு) வண்டியை (கிடறி) ஏற்றி உதைத்து, (மாய மாய்) தந்திரமாய், மடிபடிய - மடிதல் படிய- தன்னைக் கொல்ல வந்த அசுரன் மடியும் படி, தவழ்ந்து நடந்தும், ஆயர் பாடியில்- இடைச் சேரியில் வளர்ந்த (முகில்) மேக வண்ணனும் திருமாலின் மருகனே! வேலாயுதத்தை ஏந்தும் அற்புத மூர்த்தியே! மயில வீரனே!

வீரர்களாம் அசுரர் குலச் சேனைகளைத் துகைத்தழித்த (விஜய) வெற்றியாளனே! (கடம) மதத்தைக் கொண்ட (தட) விசாலமான (கபோல) கன்னத்தை உடைய (வாரண) ஐராவதம் வளர்த்த (விபுதை) தேவமாது தேவசேனையின புளகம் கொண்ட தன பாரங்களை (பூஷண) அலங்காரமாகத் தரித்துள்ளவனே! (அம்) அழகிய வேடர் குலத்து

பரிசுத்த தேவி வள்ளியின (நகில) கொங்கையை அணையும் (அருண) சிவந்த (வாகு பூதர) தோள்மலையை உடையவனே! (விபுத கடக) தேவர்களாம் சேனைக்கு நாயகனே! (கிரி மேரு பூதர விகட சமர) மலைகளுள் மேருமலையுடன் மாறுபடப் பொருதவனே! அறு கோடிக் கணக்கான- எண்ணரிய தேவர்களுக்குத் தம்பிரானே

ஓதின உணவு ஆசை தனிலே சுழலு மீனது என
ஆசு அழகு ஆன வடிவு அதனாலே
ஓதம் உடல நேரும் என, மாதர் நகை, தேடு பொருள்
ஆசை தமிலே, சுழல வரு காலன்

ஆதி விதியோடு பிறழாத வகை தேடி, எனது
ஆவி தனையே குறுகி வரு போது
ஆதி முருகா, ஆதி முருகா, ஆதி முருகா எனவும்
ஆதி முருகா நினைவு தருவாயே

ஓத முகில அடு கிரி உருபட, வாழ் அசுரர்
ஓலம் இடவே அயில கொடு அமராடி

ஓம நமசிவாய குரு பாதம் அனிலே பணியும்
யோக மயிலா, அமலை மகிழ்பாலா

நாத, பரராம அரி மாயன மருகா, புவன
நாடும் அடியார்கள் மனது உறைவோனே
ஞான சுர ஆனை கணவா, முருகனே, அமரா
நாடு பெற வாழ அருள் பெருமானே

சூதாக- வஞ்சனையாக வைக்கப்பட்ட (தூண்டில உள்ள) உணவை உண்ணும் ஆசையிலே சுழன்று வரும் மீன் போல- (தூசு) ஆடையின அழகுடனே கூடிய உருவத்தினலே

(சுதம) மாந்தளிரின நிறத்தை உடல நிறம் ஒக்கும என்று மகிழ்ந்து, மாதா மீதுள்ள காம இச்சை காரணமாக, தேடும பொருளாசை களிலே (சுழல) மனம் அலைச்சல் உறும் நாளிலே - வருகின்ற காலன்

ஆதியில- முதலில பிரமன் எழுதப்பட்ட விதிக்குத் தவறாத வகையில் (விதியின்படி) எனைத் தேடி என்னுடைய ஆவியைப் பற்ற அணுகி வரும்போது

ஆதி முருகா ஆதிமுருகா. ஆதிமுருகா என்று உனது திருநாமத்தைக்கூறித் துதிக்க, முதற் பொருளாகிய முருகக் கடவுளே! அந்த நினைவை தந்தருள வேண்டுகின்றேன்

(ஓதம) ஈரமுள்ள மேகம படிவிச செல்லும கிரவுஞ்சமலை (ஊறுபட) பொடிபட நெடுங்காலமாக வாழந்திருந்த அசுரர்கள் பயந்து கூச்சலிட வேல கொண்டு போர புரிந்து வென்று

"ஓம் நமசிவாய" எனப்படும் பஞ்சாக்ஷரத்துக்கு உட்பொருளானவரான குருமூர்த்தியாம் சிவனது திருவடியிலே பணிந்து பூசித்த, யோக நிலையைக் கூட்டுவிக்கின்ற மயிலை வாகனமாக உடையவனே! மலமற்ற வள்ளம தேவி மகிழும குழந்தையே!

(நாத) தலைவனே! ரகு ராமராம திருமாலாம் மாயனுடைய மருகனே! பூமியில் உன்னை விரும்பிப் போற்றும அடியார்களின மனத்திடத்தே உறைபவனே

ஞான ரூபியாம (சுர அனை) தேவசேனையின கணவனே! முருகனே! தேவர்கள தமது நாட்டினைப்- பொன்னுலகைப் பெற்று வாழ அருள்புரிந்த பெருமானே.

(371) சுத்த ஸாவேரி (5½) (ம) 1½+1½+1+1½ (52)

செழுந்தாது, பார். மாது, அரும்பாதிருபோடு
சிறந்து யாதிலும் ஆசை ஒழியாத
திறம் பூத வேதாளன், அரும் பாவமே தோடி
செயும், காய நோயாளன் நரகு ஏழில்

விழுந்து ஆழவே முழுக இருங்காலன் மேய, ஆவி
விடும் காலமே நாயேன் வினை பாவம்
விரைந்து ஏகவே வாசி துறந்து ஓடியே, ஞான
விளம்போசையே பேசி வரவேணும்

அழும் கோடி தேவர்கள அமர்ந்து ஆர வான நீடி,
அழன்று ஏகி, மா சீத நெடுவேலை

அதிர்ந்து ஓடவே, காலன் விழுந்து ஓடவே, கூர
அலங்கார வேல் ஏவும் முருகோனே

கொழுங் கானிலே மாதர் செழுஞ் சேலையே கொடு
இருந்து ஒரு மால் மாயன் மருகோனே
குறம் பாடு வார சேரி புகுந்து ஆசை மாதோடு
குணம் கூடியே வாழு பெருமானே

செழுமையான பொன் (மார்) மண், பெண் என்னுமமூவாசைகளும
அரும்பாதிருபோருமுதலில் அரும்பு விட்டுப் பின்னர் வளருவது போன்ற
ரூபத்துடனே,(சிறந்து) மேல மேல விளங்கி எதிலுமே ஆசை நீங்காத
(இறமு) கோட்பாட்டினை அலலது இயலவை உடைய பேய பிசாசு நான்-
* கொடிய பாவங்களை கோடிக் கணக்கில் செய்பவன் நான, உடலில்
நோய் கொண்டவன் நான். ஏழு நரகங்களிலும்
விழுந்து ஆழ்ந்து முழுகும்படி தள்ளுகின்ற காலன் (மேய்·மேவி) எனனை
அணுக, நான் உயிர் விடும் காலத்தில், அடியேனுடைய வினை,பாவம் இவை
அதிவேகத்திலே (ஏகவே) என்னை விட்டு அகலும்படி (வாசி) உனகுதி
ரையாகிய மயிலை வேகமாகச் செலுத்தி, ஓடி வந்து, ஞான
மொழிகளைச் சொல்லும் ஓசை ஒலியே கேட்கும்படி பேசி வநதருள வேண்டும்
அழுத கோடிக கணககான தேவர்கள், (வான நீடி அமர்ந்து ஆர) வானுலகில
நீடித்து மன அமைதியுடன் பொருந்தி வாழ்ந்திருக்க வேணடி (நீ)
(அழன்று ஏகி) கொதிப்புடன கோபித்துச சென்று, மிகவும்
குளிர்ச்சி கொண்ட பெரிய கடலில்
அதிர்ச்சியுடன் வேகமாய்ச் செல்லக் காலன்(அசுரர்களின் உயிரைக
கவர) வேகமாய் விழுந்து (போர் முனைக்கு) ஓடக். கூர்மையானதும்
அலங்காரம் உள்ளதுமான வேலாயுதத்தைச் செலுத்தின முருகனே!
செழிப்பான காட்டிடையே கோபிகைகளின் நலல ஆடைகளை எடுத்துக் கொண்டு
குருந்த மரத்தில் ஏறின திருமாலாம் மாயனுடைய மருகனே-
குறம் என்னும பாடல் வகையைப் பாடுபவர்களாகிய குறவர்களின்
சேரியிற் புகுந்து, உன் ஆசைக்கு உகந்த வள்ளியுடன். அவள்
குணத்துக்கு மகிழ்ந்து அவளுடன, கூடியே வாழ்கின்ற பெருமானே

372 காணடா (8½) (1+1½+2+4)

ஞான விபூஷணி, கார் அணி, காரணி,
காம விமோகினி, வாகினி, யாமளை.
மா மாயி, பார்வதி தேவி, குணோதரி, உமையாள தன்

நாதா க்ருபாகர தேசிகர் தேசிக
வேதாகமே அருள தேவாகள் தேவ, நல
ஈசா, சடா பரமேசர் சர்வேசுரி முருகோனே

தேனார் மொழீ வளி நாயகி நாயக,
வானுடு உள்ளோர் தொழும் மா மயில் வாகன,
சேண் ஆரும் மானின் மனோகரமாகிய மணவாளா

சீர்பாத சேகரனைவு நாயினன்
மோகா விகார விடாய் கெட ஓடவெ
திராகவே கலையால் உனை ஓதவும் அருள்வாயே
வேணார்கள், நீறது இடா அமணோர்களை
சூராடியே கழுமீதினில் ஏறிட
கூனை மீனன் ஏடேறிட கூடலில் வருவோனே

பேராண்மையாளன நிசாசரர் கோண், இரு
கூறுக, வாளி தொடு ரகு நாயகன,
பூ வாயன், நாரணன், மாயன் கிராகவன் மருகோனே

ஞானத்தை விசேட ஆபரணமாகக் கொண்டவள், (கார் அணி) கரிய நிறம் கொண்ட சகலத்துக்கும் காரணமாயிருப்பவள, காமத்தை உயிர்களுக்கு ஊட்டும் (ஹி) சிறந்த மோகினி, (வாதினி) பாதிரிமர நிழலில் சிவபிரானைப் பூசித்த உமாதேவி. (யாமளை) பச்சை நிறத்தி, மாயையில் வல்லவள். பார்வதி தேவி. நற்குணங்களை உடையவள் ஆகிய உமையின்

தலைவரும் கிருபாமூர்த்தியும் ஆகிய (தேசிகர்) குருமூர்த்தியாகிய சிவ பெருமானுக்கு (தேசிக) குருமூர்த்தியே! வேதம் ஆகமங்கள் இவைதமைச் சிவனுக்கு அருளிய தேவதேவனே! நல்ல ஈசனே! சடாமுடியை உடைய பரமேசுரர் - சர்வேசுரி ஆகிய இருவர் தம் குழந்தையாகிய முருகனே! தேன் போலும் இனிய மொழிகளைப் பேசும வள்ளி நாயகியின கணவனே! தேவலோகத்தில் உள்ளோர்கள் தொழுது வணங்கும் அழகிய மயில் வாகனனே விண்ணுலகத்தை ஆளும் (இந்திரன் புதல்வியாகிய) தேவசேனையின மனதுக்கு இனியவனான மணவாளனே!

உனது திருவடியை என் தலைமேற் சூடினவனாகி. அடியேனுடைய கா(ம விகார தாகம் கெட்டு ஓட்டம் பிடிக்க, நன்றாகக் கலை ஞானத்துடன் உன்னை நான் ஓத எனக்கு அருள புரிவாயாக

மதியாது இருந்தவர்களும், திருநீறு இடாதவர்களுமான சமணர்களை அச்சத்துடன் சுழற்சி கொள்ளுமாறு செய்து, கழுவின் மேல் ஏறும்படிச் செய்து கூனனாயிருந்த மீன் கொடி கொண்ட பாண்டியன் ஈடேறுமாறு (கூடலி?) மதுரைக்குப் போந்தவனே

மகா வீரனை அரக்கர் கோமான் - ராவணன் இரு கூறாய் விழ அம்பு தொடுத்த ஒரு ராமன், தாமரை மலரிதழ் ஒத்த திருவாயை உடையவன், நாராயணன் மாயவன் ராதவனாகிய திருமாலின் மருகனே!

வானோர் படா வரு சூரர்கள் மாளவே
சேனைகளோர் அவர் வீடது ஏறிட
கோனாகவே வரு நாத, குருபர, குமரேசா
வாசா மகோசரமாகிய வாசக
தேசாதியோரவர் பாதமதே தொழ
பாசா விநாசகனாகவு மேவிய பெருமானே.

373

(373) பரமேஸ்ரீ (7½) (–) ½+2+4

தசையும உதிரமும நிணமொடு செருமிய
கருமம கிருமிகள ஒழுகிய பழகிய
சடல உடல, கடை சுடலையில் இடு சிறு குடில் பேணுஞ
சகல கருமிகள, சருவிய சமயிகள
சரியை கிரியைகள் தவம் எனும் அவர் சிலர்
சவல அறிவினர், நெறியினை விட இனி அடியேனுக்கு

இசைய, இது பொருள் என அறிவு (உ)ற, ஒரு
வசனமுற, இருவினை அற, மலம் அற,
இரவு பகல் அற, எனது அற, நினது அற அநுபூதி

இனிமை தரும் ஒரு தனிமையை, மறைகளின்
இறுதி அறுதியிட, அரிய பெறுதியை,
இருமை ஒருமையில பெருமையை வெளிபட மொழிவாயே

வாழ்நாள் அழியும்படி வந்த சூரர்கள் இறந்து பட, விண்ணுலகத்தவராம் தேவர்களின் வீடாகிய பொன்னுலகம் ஈடேறி வாழ - அந்தத் தேவர்களுக்குக் (கோனாகவே) தலைவனாகவே வந்த நாதனே! குருபரனே! குமரேசனே

← வாக்குக்கு எட்டாததாகிய (வாசக) திருவாகனை உடையவனே!

தேசங்கள் பலவற்றிலும் உள்ளவர் திருவடிகளைத் தொழுது நிற்கப் பாச நாசனாய் விளங்கி வீற்றிருக்கும் பெருமானே!

373

சதை, ரத்தம் மாமிசம் நெருங்கியுள்ள, (கரும) செயல் நிறைந்துள்ள புழுக்கள் இருந்து பழகும் - அறிவில் பொருளாம் உடல, ஈறில் சுடு காட்டில் இடப்படுகின்ற சிறிய வீடு - இதைப் போற்றி வளர்க்கும்

← சகல (கருமிகள்) சாத்திரப்படி சகல கிரியைகளையும் செய்பவர்கள், போராடுகின்ற சமயவாதிகள், சரியை கிரியை தவம் எனச் சொல்லும் சிவா மனக் குழப்பம் உள்ள அறிவினர், ஆகிய இனரோ கொண்டுள்ள மார்க்கத்தை நான் விட்டொழிக்க, இனி அடியேனுக்குப்

பொருந்தும்படி இது தான (ஞானப்) பொருள் என்று என புத்தியிற் படும்படி, ஒப்பற்ற ஒரு உபதேசத்தை நான் பெற, இருவினைகள் நீங்க மும்மலங்களும் நீங்க, (இரவு பகல்) ஆன்மாவின் கேவல சகல நிலைகள் ஒழிய, எனதுடையது என்னும் மமதை - மமகாரம் நீங்க, உன்னுடையது என்னும் துவித (நோககம) பாவம் (Bhavam) நீங்க (அநுபூதி) அனுபவ ஞான உண்மையை

இன்பத்தைத் தரும் ஒப்பற்ற தனிநிலையை - வேதங்களின் முடிவான பொருள்களும (அறுதியிட அரிய) முடிவு செய்து கூறுதற்கு அரிதான பேற்றினை (இருமை ஒருமையில் பெருமையை) சக்தி சிவம் எனனும்

அசலகுலபதி தரும் ஒரு திருமகள்,
அமலை விமலைகள் எழுவரும் வழிபட
அருளி அருணையில் உறைதரும் இறையவள் அபிராமி

அநகை அநுபவை, அநுதயை, அபிநவை
அதல முதல் எழு தலமும் இசை, முறை முறை
அடைய அருளிய, பழையவள் அருளிய சிறியோனே

பசுவ பசுபதி மகிழ்தர ஒரு மொழி
மவுனம் அருளிய மகிமையும், இமையவர்
மரபில வனிதையும், வனசரர் புதல்வியும், வடிவேலும்

மயிலும், இயலறி புலமையும், உபநிட
மதுர கவிதையும், விதரண கருணையும்,
வடிவும் இளமையும் வளமையும் அழகிய பெருமானே

இரண்டு வேதங்களின் உணர்ந்த தன்மையின் பெருமை மிக்க
விளக்க பொருளினை (அல்லது) சிவன் - சீவன் எனும் இரண்டிலும்
சீவன் சிவனோடு கலந்து ஒன்றுவதால் வரும் பெருமைப் பேற்றினை
(அடியேனுக்கு) வெளிப்படும்படி உபதேசித்தருள்வாயாக

மலைகளுள் சிரேஷ்டமான இமய பர்வதராஜன் என்ற ஒப்பற்ற அழகிய
மகளாகிய பார்வதி, (அமலை) மலமற்றவள், சப்த மாதாக்களும் தன்னை
வழிபட அவர்களுக்கு அருள் செய்து திருஅண்ணாமலையில் வீற்றிருக்கும்
தேவி அபிராமி (அழகி)

பாவமற்றவள் ஞான அநுபவத்தை உடையவள், தயையோடு கூடிய
வள், என்றும் புதியவள், அதலம் முதலான ஏழு உலகங்களுக்கும்
முறைப்படி முறைப்படி (சகல செல்வங்களையும்) அடைய அருள்
பாலிக்கும் பழையவள் ஆகிய பார்வதி அருளிய சிறியோனே
அக்நி சொரூபியாகிய சிவபெருமான் மகிழும்படி, ஒப்பற்ற உபதேச மொழி
யான மௌன உபதேசத்தை நீ அவருக்கு உபதேசித்த விசேடப் பெருமையு
தெய்வ குலத்தில் வந்த வனிதையும் (தேவசேனையும்), வேடர் மகளாம்
வள்ளியும் கூரிய வேலாயுதமும்,

மயிலும், இயற்றமிழில் வல்ல புலமையும் (ஞானமும்), உபநிஷத்துக்
களின் சாராம்சங்களைக் கொண்ட இனிய பாடல்களாகிய (திருநெ
றித் தமிழ் எனப்படும் தேவாரமாகிய) உனது பாடல்களும், கொடைத்
திறம் நிறைந்த உனது கருணையும், (உனது) வடிவமும் இளமை
யும், செழுமையும் ஆகிய இவையெல்லாம் அழகுற விளங்கும்
பெருமானே

(374) சுத்த சாவேரி (8) 374 ஆதி

தத்த தனமும அடிமை சுற்றமொடு புதல்வா மனை வாழ்வும்
தக்க மனை கிளைமும
தப்பு நிலைமை அனுகைக்கு வர, விரகு குறுகாமுன்
உதைக்கும் மயல் நினைவு
பத்தியுடன் உருகி நித்தம் உனது அடிகள் தருவாயே
பற்றும் அருள நினைவு
பத்து முடி உருளவித்த பகழியினா மருகோனே
பச்சை நிற முகிலின்
அத்தி முகவன் அழகுறு பெழை வயிறன் அவல் தேனும்
அப்பம் அவரை பொரி
அப்பி அமுது செயும மொய்ப்பன் உதவ, அட அணைவோனே
விக்குள் மற மகளை
முத்தி தரு முதல்வா முக்கண் இறைவரொடு மொழிவோனே
முற்று மறை மொழியை
முட்ட அசுரா கிளை, கெடடு முறிய முதல பெருமானே
வெட்டி அமா பொருத

(375) அமிர்த வர்ஷிணி (35) 375 (ம) 1½4½40 கண்ட நடை

தரணிமிசை அனையினிட உந்தியின் வந்துகுந்
துளி பயறு கழல இனிய அண்டமும் கொணடு அதின்
தசை உதிர நிணம் நிறைய அங்கமும தங்க
நயது வாயுந

374

(தந்)அந்த பொருளும், ஏவலாளர், சுற்றத்தினரும், புதல்வரும், தகுதியான மனைவியும், மனைவியைச் சார்ந்தவர்களும் இல்லற வாழ்வும் ஆன இவை(கள்) தப்பிப் போம்படியான - இழக்கும்படியான நிலைமை நெருங்கி வர. அப்போது (விரகு-) அறிவைச் சிதைக்கும் புத்தி மாறுபாடும் என்னை அணுகி வருமுன்பு பத்தியுடனே மனமுருகி நாள் தோறும் உன் திருவடிகளைப் பற்றும் திருவருட் பேரும் நினைவைத் தந்து அருள்வாயே.

ராவணனுடைய பத்து முடிகளையும் அறுத்து உருட்டித் தள்ளின அம்பைக் கொண்டவரும், பச்சை நிற மேக வண்ணரும் ஆன திருமாலின் மருகனே

யானைமுகத்தை உடையவன், அழகுள்ள கூடை- பெட்டி போன்ற வயிற்றை உடையவன் அப்பம், அவரை, பொரி அவல், தேன் இவைகளை (தொப்பையில்) நிரப்பி உண்ணும் (மொய்ம்பன) வலிமையை உடைய கணபதி உதவி செய்யக் காட்டில் வேடர் மகள் வள்ளியை அணைந்தவனே

முத்தியைத் தரும முதல்வராம் முக்கண் மூர்த்தியொடு (மறை மொழி மூற்றும்) வேத மொழி முழுமையும் உபதேசித்தவனே

அசுரர்களை (மூட்ட) முழுமையும், தோற்றுப் போய் அழிய, (முதல்) முன்பு வெட்டிப் போர புரிந்த பெருமானே

375

இப்பூமியில் அன்னையினிட- தாயுடைய வயிற்றில் (காயப்பையில) வந்து சேரும் ஒரு துளி பயறு அளவு (கழல்) கழலுதல - விழுதலாகி, இடைகரமான ஒரு விதையாகி (முட்டை வடிவாகி) அதில் சதை, ரத்தம், கொழுப்பு இவை நிறையப் பெறப் பின்னர், அவயவங்களும் ஐந்து கூட ஒன்பது துவாரங்களும்

தரு கரமொடு, இனிய பதமும் கொடு, அங்கு உன்பதும்
பெருகி, உருபதின், அவனி வந்து, கண்டு அன்புடன்
தநயன் என நடைபழகி மங்கை தன் சிங்கியின்
வசமாகித

திரிகி, உடல் வளைய, நடை தண்டுடன் சென்று, பின்
கிடை எனவும் மருவி மனை முந்தி வந்து, அந்தகன்
சிதற உயிர், பிணம் எனவெமைந்தரும் புந்துவும்
அயர்வாகி

செடம் இதனை எமை எடுமின் என்று கொண்டு அனபுடன்
சுடலை மிசை எரியின் இட வெந்து பின இந்திரு
சென்னம் இது தவிர, இரு தண்டையுங் கொண்ட பைங்
கழல் தாரராய்

செரு எதிரும அசுரர் கிளை மங்க, எங்கெங்கனும்,
கழு கருடன், நயனம், இது கண்டு கொண்டு, அம்பரந்
திரிய, மிகு அலகையுடன் வெகு கணந் தங்களின
மகிழ்வாகிக

சின அசுரர் உடலமது தின்று தின்று இன்புடன்
டுமுடு முட டுமுடுமுட டுண்டு டுண் டுண்டு டுண(டு)
திமில பறை முழவு துடி பம்பையுஞ் சங்கமும்
தவ மோதச

ஏற்பட்ட கைகளுடன், அழகிய கால்களும் கொண்டு. அங்கே ஒன்பது (கண் 2, காது 2, மூக்கு 2, வாய்-1, மல, ஜலத் துவாரம் 2) துவாரங்களும் ஏற்படு

ஒரு பத்தாவது மாதத்தில், பூமியிற் பிறந்து, (தாய தந்தையர் அக்குழந்

தையைக்) கண்டு, அன்பு பூண்டு, மகன் என வளர்ந்து, நடை பழகிப்

பின்னர் மாதர்களின் விஷச் செயல்களிலே அகப்பட்டு

கவிப்புற்று நிலை மாறி, தேகம் வளைய (குனிய) நடை தடியுடன் பழகுவதாகி

பின்பு (படுக்கையிற) கிடக்கையுற்றுக் கிடக்க, கிடக்கும் வீட்டில் முந்தி வந்து

யமனவன், உயிரை உடலினின்றும், சிதறும்படிச் செய்ய, உயிர் நீங்கப்;

பிணமென்று மக்களும், சுற்றத்தாரும் சோர்வடைந்து

இந்தக் கட்டையாகிய உடலை எம்மின் எம்மின என்று எடுத்துக் கொண்டு

போய, அன்புடனே சுடுகாட்டில் நெருப்பில் இட, வெந்து போய் இங்

ஙனம் அழிகின்ற பிறப்பாகும் இது - இனி வராதிருக்க - தண்டைகள்

பொருந்திய அழகிய இரண்டு திருவடிகளைத் தந்தருள்வாய்

போரில் எதிர்த்து வரும் அசுரர்களின் கூட்டம் எல்லாம் வாட்டம் உற,

எல்லா இடத்தும் கழுகு, கருடன், இவைகளின் கண்கள், (இது) அசுரர்

பலர் இறந்துபடும் இந்நிலையைக் கண்டு கொண்டு, (அம்பரம்) ஆகாயத்தில்

வட்டமிட, மிக்க வரும் - பேய் வகைகளைச் சேர்ந்த கொடிய கூட்டங்கள்

தங்களுக்குள் மகிழ்ச்சி பூண்டு

சினத்துடன் அசுரர்களின் உடலைத் தின்று தின்று, மகிழ்ச்சியுடனே

டுகுடுட டுடுடுட டுண்டு டுண் டுண்டு டுண் என ஒலிக்கும் திமிலை

பறை, முரசு, துடி (உடுக்கை), பம்பை, சங்கு ஆகிய வாத்தியங்கள்

(தவ) மிகவும் (மோத) அடிபட்டு ஒலிக்க

சர வரிசை விடு குமர, அண்டர் தம் பண்டு உறுஞ்
சிறையை விட வரு முருக என்று அந்து இந்திரன்
சதுர் முகனும் அடி பரவ, மண்டு வெகுசம் பொருங்
கதிர்வேலா

சக முழுதும் அடைய அமுது உண்டிடுங் கொண்டலும்
தெரிவரிய முடியினர் அரவங்களும் திங்களும்
சலம் இதழி அணியும் ஒரு சங்கரன் தந்திடும்
பெருமானே

(376) பிலஹரி 376 (5) ◡ (1+1½+1½+1)

தலை வலய போகமும், சலன மிகு மோகமும்
தவறு தரு காமமும், கனல் போலும்
தணிவரிய கோபமும், துணிவரிய லோபமும்
சமய வெகு ரூபமும் பிறிதேதும்

அலம் அலம் என எழுந்தவர்கள், அநுபூதி கொண்டு,
அறியும் ஒரு காரண தனை நாடாது

அதி மத புராணமும் சுருதிகளும் அகிலின்று
அபரிதமாய், விளம் புவதோதான்

அம்புகளை வரிசை வரிசையாகச் செலுத்தின குமரனே! தேவர்கள் முன்பு அடைபட்டிருந்த சிறையினின்றும் வெளியேறுவதற்கே அவதரித்த முருகனே! என்று கூறி வந்து, இந்திரனும், நான்முகன்-பிரமனும் திருவடியைப் போற்றி செய்ய, (மண்டு) நிறைந்து எழுந்த கோபத்துடன் சண்டை செய்த கதிர்வேலனே!

உலகம் எல்லாவற்றையும் முழுசாக அமுதாக உண்ட மேகம் அனையவனும் திருமாலும் காணுதற்கு முடியாத திருமுடியை உடையவர், பாம்புகளையும், சந்திரனையும், கங்கையையும் (இதழி) கொன்றையும் அணிகின்ற ஒப்பற்ற சங்கரன் தந்திடும் பெருமானே.

376

சிறப்புற எல்லையை (அளவைக்) கண்ட இன்ப சுகங்களும், கலக்கம் - சஞ்சலம் மிக்க ஆசைகளும், பிழையுள்ள நெறியிற் போம்படிச் செய்யும் காம இச்சையும், தீப்போல

அடக்குதற்கு அரிதான கோபமும், துணிந்து ஒரு நல்ல காரியத்தில் கூட விடாத (உலோபமும்) ஈயாமைக் குணமும், சமய கோட்பாடுகளால் ஏற்படும் பல வேஷங்களும், பிற ஏதுவும்

போதும் போதும் என்று எழுந்தவர்கள் (ஞான உணர்ச்சியுடன் எழுந்த) ஞானிகள் அநுபூதி கொண்டு - தங்களது அநுபவ ஞானம் கொண்டு அறிகின்ற ஒரு மெய்ப் பொருளை நாடி உணராது

நிரம்ப மதக் கொள்கைகளையே சாற்றும் புராண வகைகளும், வேத மொழிகளும் ஆய் எடுத்து, அளவிலாத வகையிற் பேசுவதோ பெரிது! - வெறும் பேச்சு பயன் தராது என்றபடி.

கலக இரு பாணமும், திலக ஒரு சாபமும்
களபம் ஒழியாத கொங் கையுமாகி

கவரும் அவதாரமும், கொடிய பரிதாபமும்
கருதி இது வேளையென்று, கிராத

குல திலக மானுடன் கலவி புரிவாய, பொருங்
குலிச கர வாசவன் திரு நாடு

குடி புக நிசாசரன் பொடிபட, மகீதரன்
குலைய நெடு வேல் விடும் பெருமாளே.

377

(377) அபோகி (14) 3/14014

தவநெறி தவறிய குருடுகள், தலைபறி கதறிய பரபாதத்
தருமிகள் கருமிகள் வெகுவித சமயிகள் எவரொடு
சருவா நின்று

அவன் இவன் உவனுடன், அவள் இவள் உவள், அது இது உது
எனும் ஆறு அற்று

அரு, உரு, ஒழிதரு உரு, வுடை அது பதி தமியனும
உணர்வேனோ

(குலகம்) காமப போரை விளைவிக்கும் இரண்டு பாணங்களாகிய
கண்களும், பொட்டு இட்டுள்ள நப்பற்ற வில்லைப் போன்ற நெற்றியும்
கலவைச சாந்து நீங்காத கொங்கையுமாகி)
உள்ளததைக கவர்ந்த, இப்பூலோகத்தில் வந்துள்ள தோற்றத்
தையும், வேடரிடையே வளர்ந்து தினைப்புனத்தைக காக்க வேண்டி
வநத பரிதாபமான தொழிலையும் (கருதி) கருத்திலே வைத்து,
இதுதான் ஆட்கொள்ளுவதற்கு தக்க சமயமென்று, வேடர்களின்
குலத்தில சிறந்த மான் அனைய வள்ளியுடன் புணாச்சி நாடிப புரிவாய,
சண்டை செய்ய வலல (குலிசம்) வஜ்ராயுதத்தைக் கையிற் கொண்ட
இந்திரனுடைய பொன்னுலகம்
குடியேற, சூரன பொடிபட, (மகீதரன்) பூமியைத் தாங்கும் ஆதிசேடன்
*(குலைய) நடு நடுங்க வேலைச் செலுத்தின பெருமானே.

377

தவநெறியை விட்டு விலகின குருடர்கள், தலைமயிரைப் பறித்துத் தமது
கோட்பாடுகளைப் பலமாக எடுதது கூறும் (பரபாதம) பிற மார்க்கத்து,
அறநெறிகளை உரைப்பவாகள், (கருமிகள) தீவினை உடையோர்கள் பலவித
மான சமய நெறிகளை அனுஷ்டிப்பவர்கள் - ஆகிய இவர்களோடு போராடி நின்று
அவன், இவன், உவன என்றும், அவள், இவள உவள் என்றும், அது இது உது
என்றும் (அறு அற்று) குறிப்பதற்கு இல்லாத வகையில் நின்று
உருவம் இன்மை, உருவம் உடைமை, இவை இரண்டும (உதிதரு உரு)
நீங்கின தன்மையைக கொண்ட பொருள் தான் பதி (எனப்படும்
கடவுள்) என்னும் (அருதியை) அடியேனும் உணாவேனோ -
அறிநது கொள்வேனோ.

குவலய முழுவதும் அதிர்பட, படகுபடு இடிபட, உரகேசன்

தொகு முடி பல நெரிதர, நெடு முது குரை கடல புனல் வறிதாகத்

துவல் கொடு முறையிடு சுரர்பதி துயரது கெட திசுரார் சேனை

துகள் எழ நட நவில் மரகத துரகதம் வரபல பெருமானே.

378

(378) தர்பாரி கானடா (3½) (ப) 2+½

திரிபுரம் அதனை ஒரு நொடி அதனில் எரி செய்து அருளிய சிவன் வாழ்வே

சினமுடை அசுரர் மனமது வெருவ மயிலது முடுகி விடுவோனே

பருவரை அதனை உருவிட எறியுடன் அறுமுகம் உடைய வடிவேலா

பசலையொடு அணையும் இள முலை மகளை மதன் விடு பகழி தொடுவோனே

கரிதிரு முகமும் இடமுடை வயிறும் உடையவர் பிறகு வருவோனே

உலகம் முழுமையும் அதிர்ச்சி கொள்ளவும், வடக்கே உள்ள மேருமலை பொடிபடவும், பாம்பின் தலைவனுன் ஆதிசேடனுடைய

வளைந்த முடிகள் பலவும் நெரிபடவும், நீண்டுள்ளதும். பழைய

தும், ஒலிப்பதுமான கடல்நீர் வற்றிப் போகவும்

(துவல) அர்ச்சனைப் பூக்களொடு பூசித்து விண்ணப்பிக்கும் தேவர்

தலைவனும் இந்திரனுடைய துன்பங்களை ஒழியவும், அசுரர்களின் சேனை

பொடிபடப் பொடி எழவும், நடனம் செய்கின்ற பச்சைக் குதிரை

யாம் மயில் மீது வரவல்ல பெருமானே.

378

திரிபுரங்களை ஒரு நொடிப் பொழுதில எரித்தருளிய சிவபெருமானது

செல்வமே

கோபம் நிறைந்த அசுரர்களின் மனம் அச்சம் உற மயிலை

முடுக்கிச் செலுத்துபவனே

பெரிய கிரவுஞ்ச மலையில உருவும்படிச செலுத்தின, ஆறு திருமுகங்

களை உடைய, வடி வேலனே!

(பகல் = தலைவர் பிரிவதால காமநோயால் உண்டாகும் நிற வேறுபாடு)

பசலையொடு உன்னை அணைகின்ற இளமுலை கொண்ட (என்) மகளை மன்மதன்

செலுத்தும் பாணங்கள் தொட்டு நலிவு செய்யலாமா? (நலிவு செய்தல்

கூடாது - நீ அவளை விடடுப் பிரியலாகாது - என்றபடி)

யானையின அழகிய முகமும், விசாலமான பெரிய வயிறும் உடைய

கணபதியின் பின்பு தோன்றினவனே! (தம்பியே)

கனதனம் உடைய குறவா தம் மகளை
கருணையொடு அணையும் அணிமார்பா
அரவு அணை துயிலும் அரி திரு மருக,
அவனியும் முழுதும் உடையோனே
அடியவர் வினையும் அமரர்கள் துயரும்
அற அருள் உதவு பெருமானே.

---

(379) நாட்டக்குறிஞ்சி (2½) 379 ரூ (1+1+½)

திரை. வசை இருவினைகள், நரை அங்க(ம்),மலம் அழிய
சிவகங்கை தனில் முழுகி விளையாடி
சிவம் வந்து குதி கொள, அக வடி(வு) உணர்வு வடிவம் என,
திகழ் அன்பர் முனிவர் கணம் அயன் மாலும்
அரன் மைந்தன் என, களிறுமுகன் எம்பியென மகிழ
அடியேன் கண் அளி பரவ மயில் ஏறி
அயில் கொண்டு, திரு நடனம் என தந்தையுடன் மருவி
அருமந்த பொருளை இனி அருள்வாயே.
பரியென்ப நரிகள் தமை நடனம் கொடு ஒரு வழுதி
பரிதுஞ்ச, வரு மதுரை நடராஜன
பழி அகசி எனது அருகில் உறை புண்டரிக வடிவ
பவளம் சொல், உமை கொழுநன் அருள்பாலா

கனத்த தனங்களை உடைய குறவர் மகள் வள்ளியைக்
கருணையுடன் அணைந்த அழகிய திருமார்பனே!
பாம்பணையில் துயில்கின்ற திருமாலின் திருமருகனே! உலகெலாம்
உடையவனே!
அடியார்களின் வினைகளும், தேவர்களின் துயரமும் ஒழியும்படி
அருள் பாலித்த பெருமானே!

379

திரைகடல் அலைபோல வருகின்றவையும், வஞ்சனைச் செயல்களால வருவதுமான இருவினைகளும், மயிர் நரைத்தலுக்கு இடம் கொடுக்கும் (அங்கம்) உடலும், மும்மலங்களும் அழிவுபட, சிவாமிர்தமாம் கங்கை நீரில் (மதிமண்டலச் சுத்த கங்கை) மூழ்கி, இன்பத்தில் திளைத்து விளையாடி
உள்ளத்தில் சிவமாம் மங்கலப் பொருள் வந்து அமுதமாகப் பதிய, (அக) என்னுடைய வடிவம் உன்னுடைய வடிவம் என்று சொல்லும்படி, விளங்கும் தேவர், முனிவர் இவர்கள் கூட்டமும், பிரமனும், திருமாலும் சிவபெருமானுடைய குமாரன் என்று மகிழ, யானைமுகக் கடவுள் கணபதி என் தம்பி என்றும் மகிழ்ச்சி கொள்ள, அடியேன் இடத்தில் கருணையை மிகக் காட்ட (நீ) மயிலில் ஏறி
வேல் ஏந்தி, திருநடனத்தைச் செய்கின்ற என் தந்தையாம் சிவபெருமானுடன் (மருவி) பொருந்தி (நீ உபதேசித்த) அரிய மறைப்பொருளை எனக்கும் அருள்வாயே
குதிரையென்று, நரிகளைத் திருவிளையாடலாகக் காட்டி, ஒரு (வழுதி) பாண்டியனுக்கு இருந்த குதிரைகள் இறக்க, எழுந்தருளிவந்த மதுரை நடராஜப் பெருமான்
பழிக்கு அஞ்சினவனை சொக்கநாதப் பெருமான், என் அருகில் உறைபவன் செந்தாமரை போன்ற வடிவினன், பவளநிறத்தினன் என்று சொல்லும்படியானவன், உமை கணவன் ஆகிய சிவபெருமான் அருளிய குழந்தையே!

இருள் வருசகிரி, அவுணருடன, எங்கள் இரு வினையும்
எரியுண்டு பொடிய அயில் விடுவோனே

எனது அன்பில் உறை, சயிலம் மகிழ, வஞ்சி குறமகளொடு
எனு பஞ்சணையின் மருவு பெருமானே.

(380) ஹமீர்கல்யாணி 380 (7½) (½+1+2+3)
துன்று மதவேள், கைக
கணையாலே
தொலவு நெடு நீலக்
கடலாலே
மென்ன வரு சோலைக்
குயிலாலே
மெய் உருகு மானைத்
தழுவாயே
தென்று தமிழ் பாடத்
தெளிவோனே
செய்ய குமரேசத்
திறலோனே
வள்ளல் தொழு ஞானக்
கழலோனே
வள்ளி மணவாளப்
பெருமானே

(381) மோஹனம் 381 (3½) 2+½
தோரண கனக வாசலில முழவு
தோல முரசு அதிர
முதிராத
தோகையர் கவரி வீச, வயிரியர்
தோள் வலி புகழ,
மத கோப

இருள் சூழ்ந்ததும், வஞ்சனைச் செயல்கள் செய்வதுமான கிரவுஞ்சகிரியும் அதனிடமிருந்த அசுரர்களும், எங்கள் இருவினையும எரிபட்டு அழிய வேலைச் செலுத்தினவனே.

எனது அன்பில் உறைகின்றவரும் (சயிலம்) வள்ளி மலையில் மகிழ்ந் திருந்தவருமான, வஞ்சிக் கொடி அனைய குறமகள் வள்ளியொடு (எனு) எண்ணும்படியான - மதிக்கும்படியான பஞ்சணையில் பள்ளி கொள்ளும் அல்லது பொருந்தியிருக்கும், பெருமாளே.

380

செருக்குடன் வரும் மன்மத வேளின கை செலுத்தும் (மலர்ப) பாணத்தாலும்
துன்பத்தைத் தரும் நெடிய நீல நிறக் கடலாலும்
மெதுவாக வந்து (குரலைக் காட்டும்) சோலைக் குயிலாலும்
உடல் உருகி வாடும் மான் அனைய இந்தப் பெண்ணை அணைந்தருளுக
தெளிந்த தமிழ்ப் பாக்களைப் பாட தெளிவு கொண்ட சம்பந்தப் பெருமானே
செம்மை வாய்ந்த குமரேசன் எனப் பேர் பெற்ற பராக்ரம சாலியே
வரங்களை வழங்கும் வள்ளற் பெருமானும் சிவபெருமான் தொழுகின்ற தாளைத் திருவடிகளை உடையவனே
வள்ளிக்கு மணவாளனும் பெருமானே.

381

தோரணங்கள் கட்டியுள்ள பொன்மயமான (அரண்மனை) வாயிலில் முழவு தோல முரசு வாத்தியம் (முதலிய) ஒலிக்க, ஐம்பருவத்தினரான மாதர்கள் கவரி வீச (வயிரியர்) புகழ்ந்து பாடும் பாடகர்கள் எனது புஜ பராக்ரமத்தைச் சிறப்பித்து புகழ, மதம் கொண்டதும், கோபம் கொண்டதுமான

வாரண ரத பதாகினி துரக
மாதிர நிறைய — அரசாகி
வாழினும், வறுமை கூரினு, நினது
வார் கழல் மறிய — மொழியேனே

பூரண, புவன காரண, சவரி
பூதர புளக — தனபார
பூஷண, நிருதர் அஷண, விபுதர்
பூபதி நகரி — குடியேற

ஆரண வனச ஈரிரு குடுமி
ஆரியன் வெருவ — மயிலேறும்

ஆரிய, பரம ஞானமும் அழகும்
ஆண்மையும் உடைய — பெருமாளே

---

382 (20) (ப) ஆதி-கண்ட நடை

382 குருடடி

தோல் அததியால அபபினல் மப்பியாது உற்ற
தோருக் கை கால உற்ற — குடிலூடே
சோர்வற்ற வாழ்வுற்ற கால், பற்றி கைக்கு
வேதித்த துவத்தன — அணுகாமுன்

யானைகள், தேர்கள், காலாட்படைகள், குதிரைப் படைகள், திசை-
நிரம்ப விளங்க. நான் ஒரு அரசனாகி

வாழ்ந்தாலும் சரி, தரித்திர நிலை மிக்குப் பாடு பட்டாலும் சரி, உன்னுடைய நேர்மை பொருந்திய திருவடியைத் தவிர வேறு எதைபற்றியும் யாரைப்பற்றியும் பேசமாட்டேன், வேறு யாரையும் எதையும் புகழேன்.

முருகுதலே! உலகங்களுக்கு மூல காரண மூர்த்தியே! (சவரி) குறத்தி வள்ளியின் (பூதரம்) மலை போன்றதும், புளகம் கொண்டுள்ளதுமான தன பாரங்களை (மார்பில்) அணியாகக் கொண்டுள்ளவனே! அசுரர்கள் கண்டனம் செய்பவனே! நிந்திப்பவனே! தேவர்கள், அரசனாகிய இந்திரனுடைய (நகரி) பொன்னுலகு குடியேறும் படியும்

வேதம் ஓதுபவனும், தாமரையில் இருப்பவனும், நான்கு குடுமிகளைக் கொண்டவனுமான பெரியோனும் பிரமதேவன அச்சம் கொள்ளும் படியும், மயிலில் ஏறி வரும்

பெரியோய்! மேலான ஞானத்தையும், அழகையும், பராக்ரம திடத்தையும் உடைய பெருமானே.

382

தோலாலும், எலும்பினாலும், நீராலும் ஒப்பிலாத வகையில் அமைந்துள்ள தோள் கை, கால் இவை கூடிய குடிசையாம் உடலிடத்தே

தளர்ந்து போதல் இல்லாது நான் வாழ்ந்திருக்கும் (கால) காலத்தில் என்னைப் பிடித்துச் செல்வதற்கு (வேதித்த) என் மேல் மாறு கொண்ட (பகைமை பூண்ட) திரிசூலத்தை ஏந்தின யமன் என்னிடம் நெருங்கி வரும் முன்பாக

கோலத்தை, வேலைகளே விட்ட சூர், கொத்தோடே
பட்டு வீழ்வித்த கொலைவேலா
கோது அற்ற பாதத்திலே, பத்திகூர் புத்தி
கூர்கைகளு நீ கொற்ற அருள்தாராய்
ஆலத்தை, காலத்து உண்ணோர், திக்கு, வானத்தா
ஆவிகக்ன் மாளவித்து மடியாதே
ஆவித்து, மூலத்தொடே உட்கொள, ஆதிக்கும்
ஆம் வித்தையாம் அத்தை, அருள்வோனே.

சேல உத்த வேல் உத்த நிலத்து மேவிட்ட
தோதக்கண் மானுக்கு மணவாளா

தீது அற நீதிகுள் ஏய், பத்தி கூர் பத்தர்,
சேவிக்க வாழ்வித்த பெருமானே

---

(383) நாதநாமக்ரியா ($7\frac{1}{2}$) 383 ($2+1\frac{1}{2}+1\frac{1}{2}+1+1\frac{1}{2}$)

நரையோடு, பற் கழன்று, தோல் வறறி
நடை அற, மெத்த நொந்து, காய் எய்த்து,
நயனம் இருட்டி நின்று, கோல உற்று நடைதோயா
நழுவும் விடத்தை, ஒன்று போல வைத்து,
நமது என, மெத்த வந்த வாழ்வுற்று
நடலை படுத்தும் இந்த மாயத்தை நகையாதே

தனது உருவைக் கடலிலே (மாமரமாய்ச்) சேர்பித்த சூரன், தன குலத
தாருடன் அழிந்து விழச் செய்த, கொலைத் தொழில் வல்ல வேலாயுதனே!
குற்றமற்ற உனது திருவடியிலே, பத்தி மிக்க புத்தி மிகுதற்கு நீ
வெற்றி தருவதாம் திருவருளை தந்து அருள்வாயே

ஆலகால விஷத்தைப் பூமியில உள்ளோர்களும், பல திசைகளில் இருந்த
வர்களும், வானில் இருந்தவர்களும். தத்தம் உயிர் மாண்டு இறந்து யாமல்
களித்து-நடித்து, அடியோடு முழு விஷத்தையும். உட கொண்ட- உண்ட
ஆதி மூர்த்திக்கும், அரும வித்தையாகின்ற அதை- ஞான (வித்தை)
உண்மை ஞானமாகிய அந்தப் பொருளை உபதேசித்தவனே!

சேல மீன் போன்றும், வேலாயுதம் போன்றும், நீலோற்பல மலருக்கும்
மேலாகவும் உள்ளதும் (தோதகக் கண்) (உனக்கு)(காம) வருத்தம் தருவது
நான கண்களாக கொண்ட மான் அனைய வள்ளிக்கு மணவாளனே.
குற்றமில்லாத நெறியிற் பொருந்தி நிற்கும், புத்தி மிக்க பத்தர்கள்
(உன்னை) போற்றி வழிபட (அவர்களை) வாழ்வித்த பெருமானே

383

நரைமயிர் வர, பற்கள் கழன்று விழ. தோல வற்றிப் போக, நடக்கும் நடை
அறுதுப் போக, மிகவும் நோவுற்றுக், கால்கள் இளைப்பு உற. கண்கள்
இருள் அடைந்து நின்று, தடியை ஊன்று கோலாகக் கொண்டு,
நடை பயின்று

நழுவி மறையப் போகும் (உடக்கை) இந்த மாமிச சரீரத்தை, (ஒன்று போல)
நிலைத்து நிற்கும் ஒரு பொருள் போல பாவித்து. நமமுடையது நம்முடையது
என்று தமது உடைமைகளைப் பாராட்டி, (மெத்த) அங்ஙனம் சேகரித்து வந்த
வாழ்வை-செல்வத்தை அடைந்து (நடல் பகுத்தும்) ஈறறில் துன்பத்தை உண்டாக்கும்
இந்த மாய வாழ்க்கையை, சீ என்று சிரித்து விலக்காமல்

விரையொடு பற்றி, வண்டு பாதேற்ற
மிருகமதம் அப்பி வந்த ஓதிக்கும்,
மிளிரு மையை செறிந்த வேல கட்கும் விரையோடு
மிகு கவின் கிட்டு நின்ற மாதர்க்கும்.
இடைபடு, சித்தம் நன்றுவேன, உற்று. உன்
எழுமிய பொற்பதங்கள் பாடற்கு வினவாதோ

உரையொடு சொற், தெரிந்த மூவாக்கும்
நனி பெற நற் பதங்கள் போதித்தும்,
நரு புடை பச்சை நங்கையொடு உற்றும் உலகூடே

உருபவி பிசைசை கொண்டு போயுற்றும்
உவரி விடத்தை உண்டு சாதித்தும்
உலகிய மூப்புரங்கள் வேவித்தும உற நாகம்
அரையொடு கட்டி அந்தமாய் வைத்தும
அவிர் சடை வைத்த கங்கையோடு நக்க
அழகு திருத்தி இந்து மேல் வைத்தும அரவோடே
அறுகொடு நொச்சி தும்பை மேல் வைத்த
அரி அயன் நித்தம் வந்து பூசிக்கும்
அரன் நிமலர்க்கு நன்றி போதித்த பெருமானே

நறுமணத்தை நுகர்ந்து வண்டு பாடல் பாட, கஸ்தூரிமை அப்பி வந்த தோய்ந்துள்ள கூந்தலுக்கும், விளங்கும் மை நிறைந்துள்ள வேல் போன்ற கண்களுக்கும், தந்திர எண்ணத்துடனே

மிக்க அழகைச் செய்து கொண்டு அலங்காரத்துடன் நிற்கும் மாதர்களுக்கும் மத்தியிலே அவஸ்தைப் படுகிறை, உள்ளம் சென்று பொருந்துதலை உடையவனாகிய நான் (உற்று) அன்பு பூண்டு, உன்னுடைய சிறந்த அழகிய திருவடிகளை பாடிப் புகழுதலை ஆய்ந்து மேற்கொள்ளேனோ! (ஆயந்து அமையாதோ)

பொருளும் சொல்லும (சிவம். சக்தி) இவர்களின் உண்மை நிலை தெரிந்த பிரமன, திருமால், உருத்திரன என்னும மூவர்க்கும் (அல்லது சம்பந்தர், அப்பர், சுந்தரர்) ஒளி பெற - அவர்கள கீர்த்தி ஒளி பெற (நற் பதங்கள்) சிறந்த எழுத்துக்களான ஐந்தெழுத்தை - பஞ்சாக்ஷரப் பொருளை - உபதேசித்தும் - அல்லது சிறந்த தெய்வப் பதவியை வகிக்கக் கற்பித்தும் - தமது ஒரு பாகத்தில் பச்சைப் பெருமாட்டியாம் பார்வதியோடு அமைந்தும், உலகெங்கும

கிடைக்கும (பலி) பிச்சையை ஏற்றுக் கொண்டு சென்றும், கடலில் எழுந்த விஷத்தை உண்டு (தமது பரத்தை) நிலை நிறுத்தியும், பறந்து செல்லும் தன்மை வாய்ந்த திரிபுரங்களை எரித்தும், பொருந்தும்படிப் பாம்பை அரையிலே கட்டி அழகாக அமைத்தும், விளங்குகின்ற சடையின மேல் தரித்துள்ள கங்கையுடனே ஒத்திருக்க அழகு பெற்று இலங்கும்படிப் பிறைச் சந்திரனை மேலே வைத்தும, பாம்புடனே

அறுகையும், நொச்சியையும், தும்பையையும் மேலே சூடியுள்ளவரும், திருமால் பிரமன் இருவரும நாள் தோறும் வந்து பூசிக்கப் பெற்றவருமான, அரன் என்னும் நிர்மல மூர்த்தியாம் சிவனுக்கு நல்ல உபதேசப் பொருளை உபதேசித்த பெருமானே

(384) மலஹரி (16) (ட) ஆதி-உதன

நாராலே தோல் நீராலே ஆம்
நாறு வாசற — குடிஆடே
ஞாதரவாயே, மாழ் கால, ஒதுய்
நாய் பேய் சூழ்கைக்கு — இடமாமுன்

தார் ஆர் ஆர், தோள் ஈராறுனே,
சார்வானோர் நற் — பெருவாழ்வே
தாழாதே, நாயேன், நாவாலே
தாள் பாடு ஆண்மைத் — திறல் தாராய்
பார் ஏழ், ஆர் தாளாலே அளவோர்
பாவார் வேதத்து — அயனும்
பாலூடே வானூடே, யாரூடே
ஊர் பாதத்தினை — நாடாச்
சீரார், மாதோடே வாழ்வார, நீள்
சே ணார்வார், பொற் — சடை ஈசா

சேயே வேளே பூவே கோவே
தேவே தேவப் — பெருமானே

385

(385) துர்கா (7½) (−) 1½+2+4

நாலிரண்டு இதழாலே கோலிய
... மேலே தாண் இள

நார் போன்ற நரம்புகளாலும், தோலாலும், நீராலும் (ஆம) ஆகியுள்ள
அமைந்துள்ள, பல விதப் பட்ட வாயில்களை உடைய (நவத்துவாரங்கள்
முதலிய வாயில்களை உடைய) குடிசையாகிய இந்த உடலினுள்
அறிவு வாய்ந்தவனாய், வாழ்கின்ற காலத்தில், (ஏகுதல் ஆய்) போத
ஆற்று - இறந்து போய், நாயும் பேயும் என் உடலைச் சூழுதற்கு -
(இடமா முன்) சமயம் ஏற்படுவதற்கு முன்பாக
(ஆர் தார் ஆர்) ஆத்தி மாலை நிறைந்த தோள்கள் பன்னிரண்டு உடைய
வனே! உன்னைச் சார்ந்த அடியவர்களுக்கு நல்ல பெருவாழ்வே!
தாமதிக்காமல், நாயனைய அடியேன் எனது நாவைக் கொண்டு
உனது திருவடியைப் பாடும் வலிமைத் திறலை தந்தருள்வாய்!
ஏழு லோகங்களையும் ஐயமற்ற தமது முயற்சியால காத்தாளுகின்ற
திருமாலும், பரப்பு உள்ள பரந்த வேதத்தை ஓதும் பிரமனும்
வெட்ட வெளிப் பாழிலும், வானிலும், மண்ணிலும் பரவி நிற்கும்
திருவடியினை நாட முடியாத
சிறப்பினை உடையவர், தேவி பார்வதியுடனே வாழ்கின்றவர், (ஸ்ரீ) பெரிய
(சே) இடபத்தை வாகனமாகக் கொண்டவர், பொன்னிறச் சடையினை
உடையவர் ஆகிய சிவபெருமானுடைய
குமாரனே! செவ்வேளே! அழகோ தலைவனே! தேவனே!
தேவர் பெருமானே! தெய்வப் பெருமானே!

385

அறிதழக் கமலமாய்க் (கோலிய) வகுத்து அமைக்கப்பட்டுள்ளதான
(கால் அம முண்டக மேலே) தொங்கிப் பொருந்தியுள்ள அறுதத் தாமரை
யின் மேல் - சுவாதிஷ்டானம் - எனப்படும் ஆதார ஸ்தானத்தே

ஞாயிறு என்றுறு கோலாகாலனும் அதின் மேலே

ஞாலம் உண்ட பராண ஆதாரனும்
யோக மந்திர மூல ஆதாரனும்
நாடி நின்ற ப்ரபாவ ஆகாரனும் நடுவாக

மேல் இருந்த கிரீடா பீடமும்
நால் அறிந்த மணி மா மாடமும்
மேதகும் ப்ரபை கோடா கோடியும் இடமாக

வீசி நின்றுள தூபா தீப
விசால மண்டப மீதே ஏறிய
வீர பண்டித வீர ஆசாரிய வினை தீராய்

ஆல கந்தரி, மோடா மோடி, கு
மாரி, பிங்கலை நானா தேசிய
மோகி, மங்கலை, லோகா லோகி, யெ உயிர் பாலும்

ஆன சம்ப்ரமி, மாதா மாதவி,
ஆதி, அம்பிகை, தாதா ஆனவர்
ஆட, மன்றினில் ஆடா நாடிய அபிராமி

(இளஞாயிறு) உதிக்கும் செஞ்ஞாயிறு என்று சொல்லும்படியான செம்பொன்
நிறமுள்ள (கோலாகலனும்) ஆடம்பரம்- சம்பிரமம் உள்ள பிரமனும்,
அந்த ஆதாரத்தின மேல் நிலையிலே

பூமியை உண்டவரும். உயிர்களைக் காக்கும் தொழிலைக் கொண்டவரும
மணிபூரகம் எனப்படும் ஆதார ஸ்தானத்தில் உள்ளவருமான திருமாலும
யோகத்துக்கும மந்திரங்களுக்கும் மூல ஆதார ஸ்தானமாகிய இருதய கமலத்தே
அநாகதம் எனப்படும் ஆதார ஸ்தானத்தே உள்ள ருத்ரனும் (அகமூவரும்)
விரும்பித் தேடி நிற்கும் தனியும் மேன்மையும் கொண்ட உருவத்தனைப்
புருவ மத்ய ஸ்தானத்தில உள்ள சதாசிவ மூர்த்தியும், நதிகளில் வீற்றிருக்கு
கிவாகளுக்கு மேலான நிலையில இருந்த, (உறை)க்ரீடைகளுக்கு (லீலைகளுக்கு)
வேண்டிய இருப்பிடமும், சாஸ்திர நூலகள 'இறைவன் வீற்றிருக்கும் ஸ்தானம்
இது' என்று அறிந்து கூறுவதுமான, ரத்ன மயமான அழகிய (மாடமும்)
மண்டபமும் ஆன. மேன்மை வாய்ந்த (ப்ரபை) ஒளி கோடா கோடிக் கணக்
காய (பெருங்கணக்காய்) விளங்கும் இடமே- உறை இடமாகக் கொண்டும்
வீசி நின்று காட்டப்படும் தூய தீபங்கள் விளங்கும் விசாலமான மண்ட
பத்திலே ஏறி அமர்ந்துள்ள வீர பண்டிதனே! வீர ஆசாரியனே!
எனது வினைகளை ஒழித்தருள்வாய!

விஷம் பொருந்திய கழுத்தை உடையவள். ஆடம்பரமுளள துர்க்கை. குமாரி(மூப்பு
இல்லாதவள்) பொன்னிறத்தவளாம் 'காகிணி', பல வித ஒளிகளில ஆசை பூண்
டவள, என்றும் சுமங்கலி. எல்லா உலகங்களையும் ஈன்று புரப்பவள், எல்லா உயிர்களிடத்தும்
அன்பு வைத்துள்ள பெருமிதம் உடையவள், தாய, மாதவி (துர்க்கை)
அதிநாயகி. அம்பிகை. எல்லாம அறிந்த இறைவன் நடிக்க (அவருடன)
அம்பலத்தே ஆடி விரும்பின அழகி

காலசங்கரி, சீலா சீலி, த்ரி
சூலி, மந்த்ர சுபாஷா பாஷணி,
கான கண்டி, கபாலீ, மாலினி, கலியாணி

காம தந்திர லீலா லோகினி
வாம தந்திர நூல் ஆய்வாள், சிவ
காம சுந்தரி வாழ்வே, தேவர்கள் பெருமானே

386

(386) கமாஸ் ($6\frac{1}{2}$) (ம) $2+1\frac{1}{2}+3$

நாரு மிகுத்த கவிவாகி
கான நிருத்தம் அதை நாடும்
ஏழை தனக்கும் அநுபூதி
ராதி தழைக்க அருள்வாயே
பூளை எருக்கு மதி . நாக
புணா அளித்த சிறியோனே
வேளை தனக்கு உசிதமாக
வேழம் அழைத்த பெருமானே

387

(387) குந்தலவராளி ($6\frac{1}{2}$) (ம) $\frac{1}{2}+1\frac{1}{2}+1+1\frac{1}{2}+3$

நித்தம உற்று உனை நினைத்து மிகநாடி
நிட்டை பெற்று இயல கருத்தர் துணையாக

யமனை சங்கரித்தவள், பரிசுத்த தேவதைகளுக்குள் மிகப் பரிசுத்த மானவள், முத்தலைச் சூலத்தை ஏந்தியவள், மந்திரங்களின் நல்ல சொற்களை பேசுபவள், கறுத்த நீல நிறக கழுத்தை உடையவள் கபாலத்தை ஏந்தியவள், (மாலினி) மாலையை அணிந்தவள் (அல்லது) அசுரங்களின் தெய்வமாக இருப்பவள், (நித்ய) கல்யாணி)

காம சாத்திரம் கூறும் விதிகளை லோகத்தில் நடத்தி வைப்பவள்,

(வாம தந்திர நூல்) சக்தி உபாசனை முறையைக் கூறும் ஆகம நூலால்

ஆராயப்பட்டவள், ஆகிய சிவகாம சுந்தரியாம் பார்வதியின்

செல்வமே! தேவர்கள் பெருமானே!

386

தினந்தோறும் மிக்க அன்பு மிகுந்த (கசிந்த) நெகிழ்ந்த உள்ளத்தவரை (உனது) ஞான நடனக் கோலத்தைக் காண விரும்பும்

எளியேனாகிய எனக்கும் அனுபவ ஞானம் என்னும்

யோகம்-பாக்கியப் பொருத்தம் பெருகி விளங்க அருள்வாயே

பூளைப்பூ, எருக்கு, நிலவு, பாம்பு - இவைகளைப்

பூண்டுள்ள சிவபெருமான அருளிய சிறியோனே

உனக்கு வேண்டியிருந்த சமயத்துக்கு தக்கபடி சமயோசிதமாக

யானையை- கணேசரை- வரவழைத்த பெருமானே

387

தினந்தோறும பொருந்தி உன்னை நினைதது மிகவும விருமபியும்

தியான நிலையைப் பெற்று அழகும் கருததமைந்த பெரியோர்களைத துணை யென

நத்தி உத்தம தவத்தின — நெறியாயே

லக்ஷ்ய லக்கண நிருத்தம் — அருள்வாயே

வெற்றி விக்ரம அரக்கர் — கிளைமாள

விட்ட நந்து கரனுக்கு — மருகோனே
குற்றம் அற்றவா உளத்தில — உறைவோனே
குக்குடக் கொடி தரித்த — பெருமானே

---

(388) காபி (6) 388 (4) 014

நிமிர்ந்த முதுகும் குனிந்து சிறந்த முகமும் திரங்கி,
நிறைந்த வயிறும் சரிந்து, — தடி ஊணி
நெகிழ்ந்து சடலம் தளர்ந்து, விளங்கு விழி அங்கு இருண்டு
நினைந்த மதியும் கலங்கி — மனையாள கண்டு
உமிழ்ந்து பலரும் கடிந்து, சிறந்த இயலும பெயர்ந்து
உறைந்த உயிரும் கழன்று — விடுநாள் முன

உகந்து மனமும் குளிர்ந்து பயன கொள் தருமம் புரிந்து
ஒடுங்கி நினையும் பணிந்து — மகிழ்வேனே

(நதி) விரும்பியும், உத்தமமான- சிறந்த தவ ஒழுக்கத்தை நான் பற்றுவதின் பயனாக,

இலக்கியத்தில் (பரத சாஸ்திரத்தில்) சொல்லிய படியும், நிருத்த இலக்கணப்படியும் உன்ன உனது நிருத்த தரிசனத்தை அருள்வாயே (அல்லது) இலக்கிய இலக்கணங்களிற் கண்டுள்ளபடி (நிருத்தம்) பற்றின்மை என்னும் பாக்கியத்தை அருள்வாயே.

வெற்றியும், பராக்ரமும் கொண்டிருந்த அசுரர்களின் சுற்றத்தார் யாவரும் இறக்கும்படி

வைத்த சங்கம் ஏந்திய திருக்கரங்களை உடைய திருமாலுக்கு மருகனே.

குற்றம் என்பதே இல்லாத பெரியோர்களின் உள்ளத்தில் விளங்குபவனே

கோழிக் கொடியை ஏந்திய பெருமானே

388

நிமிர்ந்துள்ள முதுகும் குனிந்து, சிறந்த முகமும் சுருக்கம் கண்டு, நிறைந்து ஒழுங்காயிருந்த வயிறும் சரிதலுறச் சரிந்து, தடியை ஊன்றுவதாகி நெகிழ்வுற்று உடலும் தளர்ந்து, ஒளியுடன் இருந்த கண் அங்கு இருளடைந்து, நினைவுடன் இருந்த அறிவும் கலக்கம் உள்ளதாகி, மனைவள் பார்த்து (சீனை) உமிழ்ந்து பிறர் பலரும் வெடு வெடு என்று பேசி, சிறப்பாக இருந்த குணத்தன்மையும் நீங்கலாகி, (உடலிற் குடி கொண்டிருந்த) உயிரும் பிரிந்து விடும் நாள (வருவதற்கு) முன்பாக

மனமகிழ்ச்சியுடனும், உள்ளக் குளிர்ச்சியுடனும், நல்ல பயன்களைத் தரக் கூடிய தருமங்களைச் செய்து மன ஒடுக்கம் அடைந்து உன்னைப் பணிந்து மகிழ மாட்டேனோ!

திமிந்தி என வெங் கணங்கள் குணங்கா மலவும் குழம்பி
திரண்ட சதியும் புரிந்து முது சூரன்

திரம் கை முழுதும் குவைந்து நிணங் கொள குடலும் தொளைந்து
கிணங் கழுகொடும பெருங் குருதி மூழ்கி

அமிழ்ந்து மிகவும் பிணங்கள் அயின்று மகிழ் கொண்டு மண்ட
அடாந்த அயில் முன துரந்து பொரு வேளே

அலங்கலென வெண் கடம்பு புனைந்து புணரும் குறிஞ்சி
அணங்கை மணம் முன் புணர்ந்த பெருமானே

(7½) 389 (-) 1½+2+4

389 மத்யமாவதி

திருதரார்க்கு அரு காவா ஜெய ஜெய
சுரர்கள் ஏத்திடும் வேலா ஜெய ஜெய
நிமலனார்க்கு அரு பாவா ஜெய ஜெய விறலான
நெடிய வேற்படையானே ஜெய ஜெய
என இராப்பகல் தானே நான் மிக
நிதை தான் தொழுமாறே தான் இனி உடனே தான
தரையின் ஆழ்த் திரை ஏழே போல் எழு,
பிறவி மாக்கடலூடே நான உழு
சுவல் தீர்த்து உன தானே சூடி உன் அடியார் வாழ்

(110)

திமிந்தி என்னும் ஒலியுடன் கொடிய (குணங்கா கணங்கள்) பிசாசுக் கூட்டங்கள்- அலகைத் திரள்கள் பல வகையனவும் (குழும்பி) ஒன்றுகூடி கூட்டமாக நின்று தாள ஒத்து இட்டுப், பழையவனை சூரனுடைய தலை, கை இவை யாவற்றையும் குடைந்து, மாமிசம் கொண்ட குடலைத் தொளை செய்து, கோபம் கொண்ட கழுகுடனே, (அந்தச் சூரனுடைய) மிக்குப் பெருகும் ரத்தத்தில் மூழ்கி அமிழ்ந்தும், நிரம்பப் பிணங்களை (அயின்று) தின்று, மகிழ்ச்சி கொண்டு நெருங்க, தாக்கும் வேலாயுதத்தை முன்பு செலுத்திச் சண்டை செய்த வேளே மாலையாக வெண்கடம்பு மாலையை அணிந்து, உன்னுடன் கூடின மலை நிலத்துப் பெண்ணாகிய வள்ளியை முன்பு திருமணம் செய்து கொண்டு கூடின பெருமாளே

389

அசுரர்களுக்கு ஒரு காலனாக ஏற்பட்டவனே! நீ வெல்க வெல்க, தேவர்கள் போற்றித் துதிக்கும் தேவனே! ஜெய ஜெய, பரிசுத்த மூர்த்தியாம் சிவனுடைய ஒப்பற்ற குழந்தையே ஜெய ஜெய, வீரம் வாய்ந்த பெரிய வேலாயுதத்தைப் படையாகக் கொண்டவனே ஜெய ஜெய. என்றெல்லாம் இரவும் பகலுமே நான் நிரம்ப உன்னுடைய திருவடியைப் பணிந்து போற்றும்படி, இனித் தாமதிக்காமலே தான் இப்பூமியில், ஆழமுள்ள (திரை) கடல் ஏழு போல எழுகின்ற (உண்டாகின்ற) பிறவி என்கின்ற ஒழிவில்லாத பெரிய கடலுள் நான் அனுபவிக்கும் மனக்குழப்பத்தை ஒழித்து, உன்னுடைய திருவடியையே தலையிற் சூடினவனாய், உன்னுடைய அடியார்கள் வாழ்கின்ற

சவையின் ஏற்றி, இன ஞான போதமும்
அருளி, ஆட்கொளுமாறே தான், அது,
தமியனேற்கு முனே நீ மேவுவது — உரு நாளே

தருவின நாட்டு அரசு ஆள்வான், வேணுவின்
உருவமாய்ப் பல நாளே, தான் உறு
தவசிறை, சிவன் நீ போய் வானவர் — சிறை தீரச

சகல லோக்கியமே தான் அருளும்
அசுர பார்த்திபனோடே சேயவர்
தமரை, வேற்கொடு நீறேயபட — விழ மோது என்று

அருள, ஏற்று, அமரோடே போய், அவா
உறையும் மாக்கிரியோடே தானையும்
அழிய வீழ்த்து, எதிர் சூரோடே அமர் — அடல் ஆகி

அமரில் வீட்டியும், வானோர் தானுறு
சிறையை மீட்டு அரனார் பால் மேவிய
அதி பராக்ரம வீரா, வானவா — பெருமாளே

(390) நவராக கனடை (12) 390 ஆதி-திஸ்ர நடை

நீரும் என்பு தோலினாலும் ஆவது என கை காலகளோடு
நீளும் அங்கமாகி மாய — உயிர உறதி

கூட்டத்தில் என்னைக் கூட்டி வைத்து, இனிய ஞான உபதேசத்தையும் எனக்கு அருள் செய்து - உபதேசித்து - என்னை ஆட்கொள்ளவே (அது) அதன் பொருட்டே, தனியேனாகிய என் முன்பு நீ வந்து தோன்றுவதான ஒரு நாள் உண்டோ! ஒரு பாக்கிய நாள் எனக்குக் கிடைக்குமோ!

கற்பக தருக்கள் உள்ள பொன்னுலக அரசாட்சியைப் புரிபவனாகிய இந்திரன், (வேணு) மூங்கிலின் உரு எடுத்து பல நாட்கள், தான் செய்த தவத்தின் பயனாகச், சிவன் உன்னை "நீ சென்று தேவர்களின் சிறையை நீக்கும் பொருட்டு

எல்லாவித லௌகீகம் - உலக இன்பங்களையும் ஆண்டு அனுபவிக்கும் அசுர ராஜனான சூரனையும், அவன (சேய்வர்) மக்களையும், சுற்றத்தினரையும் வேலாயுதம் கொண்டு (நீறே பட) அவர்கள் பொடியாய் அழிந்து விழும்படித் தாக்குவாயாக" என்று

திருவாய் மலர்ந்தருள, (ஏறு) அவர் மொழிக்கு இணங்கி ஏறு, போருக்கு எழுந்து சென்று, அந்த அசுரர்கள் இருப்பிடமாகக் கொண்டிருந்த, பெரிய கிரவுஞ்சம், எழுகிரி ஆகிய மலைகளையும், (தானை) சேனைகளையும், அழிந்து விழும்படிச் செய்து, எதிர்த்து வந்த சூரனுடன் (அமர் அடலாகி) போருந்திய பகைமை (அல்லது) வலிமை பூண்டு

போரிய அவனை அழித்தும், தேவர்களை அவர்கள் அடைபட்டிருந்த சிறையினின்றும் மீட்டும், சிவபெருமானிடத்தே வந்து சேர்ந்த, மகா பராக்ரம வீரனே! தேவர்கள் பெருமானே!

390

நீர், எலும்பு, தோல் இவைகளால் (ஆவது என்) ஆக்கப்பட்டது என்று சொல்லப்பட்டு, கை கால் இவைகளோடு நீண்ட அங்கங்களை உடையதாகி - உடல் கொண்டு - மாய மயமான உயிர் அவ்வுடலிலே உறைப்பெற்று, உறையப் பெற்று

நேசம் ஒன்று தாதை தாயர் ஆசை கொண்ட போதில் மேவி
நீதி ஒன்று பாலன் ஆகி அழிவாய் வந்து

ஊறும் இன்ப வாழ்வுமாகி, ஊனம் ஒன்று இலாது, மாத
ரோடு, சிந்தை வேடை கூர, உறவாகி
ஊழி மைந்த கால மேதியோனும் வந்து பாசம் வீசி
உனன் உடம்பு மாயு மாயம் ஒழியாதோ

தரன் அண்ட லோக மேன்மை தறை கொண்டு போய் விடாது
தோகையின கண மேவி வேலு விடும் வீரா
தோளில் என்பு மாலை, வேணி மீது கங்கை சூடி, ஆடு
தோகை பங்கரோடு ஓது மொழிவேனே

பாரை உண்ட மாயன், வேயை ஊதி, பண்டு பாவலோர்களை
பாடல் கண்டு ஏகும் மாலின மருகோனே

பாதகங்கள் வேறு சூறி நீதியின் சொல் வேத வாய்மை
பாடும் அன்பர் வாழ்வதான பெருமானே

(12)

ஆசை பொருந்திய தந்தை தாய் ஆகிய இருவர்களும் காதல் கொண்டு
சமயத்தில் கருவில் உற்று, ஒழுக்க நெறியில் நிற்கும் பிள்ளையாகத்
தோன்றி, அறிவதற்கே உரியவனாய் பூமியில் வந்து
அனுபவிக்கும் இன்ப வாழ்வை உடையவனாகி, குறை ஒன்றும் இல்லாமல்,
மாதர்களுடனே உள்ளத்து ஆசை மிகவும் எழ, அவர்களுடன் சம்பந்தப்பட்டு
ஊழ்வினையின்படி அமைந்த முடிவு காலத்தில் (மேதியோனும்) எருமை
வாகனனும் எமனும் வந்து பாசக்கயிற்றை வீச, (இந்த) மாமிச உடல்
அழிந்து போகும் மாயச் செயல் முடிவு பெறாதோ!
சூரன் அண்டங்களாம் லோகங்களின் மேலாம் தலைமையைக் கொள்ள அடிமைப்
போய் விடாமல், மயிலின் மீது ஆரோகணித்து வேலைச் செலுத்தின வீரனே
தோள் மீது எலும்பு மாலையும், சடையின் மீது கங்கையையும் சூடி ஆடல்
புரியும், மயிலனைய பார்வதிபாகராம் சிவனுக்குச் (சூது) ரகசியப்
பிரணவப் பொருளை உபதேசித்தவனே!
இப்பூமியை உண்டவனான மாயவன், புல்லாங்குழல் ஊதி (மகிழ்பவன்)
முன்பு திருமழிசை ஆழ்வார் ஆதிய கவிஞர்களின் பாடல்களைக் கண்டு மகிழ்ந்து
(அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்கி) அவர்கள் பின்பு செல்பவனாகிய
திருமாலின் மருகனே!
பாவங்களை (வேறு) குலைத்து, (நூறி) பொடி படுத்தி, நீதிச் சொற்களைக்
கொண்டு வேத உண்மைகளை எடுத்துப்பாடும் அடியார்களுக்கு செல்வப்
பொருளாயுள்ள பெருமானே